விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:– பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி 29 | செவ்வாய்க்கிழமை (15.11.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 331

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமெந்து

# ஜனாதிபதித் தேர்தலன்று யாழில் பூரண துக்கதினம்

## கரிநாளாகவும் அனுஷ்டிக்க வேண்டுகோள்

(நமது நிருபர்)

நாளை மறுதினம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணித்து அன்றைய தினத்தை துக்கதினமாகவும், கரிநாளாகவும் அனுஷ்டிக்குமாறு யாழ். மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் இராணுவத்தினர் அல்லது பொலிஸார் அல்லது வேறு சில சக்திகளின் அச்சுறுத்தல், நிர்ப்பந்தம் காரணமாக யாராவது வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்கும் நிலை ஏற்பட்டால் வாக்குச்சீட்டை செல்லுப்படியற்றதாக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் பொதுஅறையில் ஒன்றுகூடிய யாழ். பல்கலைக்கழக சமூகப் பிரதிநிதிகள், யாழ். குடாநாட்டு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், உயர் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் துறைசார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி இம்முடிபினை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் கூட்டறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். அவ்வறிக்கை வருமாறு:

(2 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று பொலிஸாருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

(கிளிநொச்சி)

மன்னாரில் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் அனுமதியின்றி உள்நுழைந்த குற்றத்திற்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூன்று பொலிஸாரையும் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தடுப்புக்காவலில் உள்ள இம்மூன்று பொலிஸார் மீதான விசாரணை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நேற்று இடம்பெற்றது.

மூன்று பொலிஸாரும் ஊடுருவித் தாக்கும் நோக்குடனேயே எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்நுழைந்தார்கள் என்பதற்கான

(12 ஆம் பக்கம் பார்க்க)




ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்பது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் அறையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் சத்தியப்பிரமாணம் செய்வதை படத்தில் காணலாம். (படம்: யதார்த்திகன்)

## தேர்தல் சுமுகமாக இடம்பெற்றால் மறுநாள் முடிவுகள் வெளியிடப்படும்

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் நடவடிக்கைகள் அனைத்தும் சுமுகமாக நடைபெறும் பட்சத்தில் இறுதிமுடிவினை வெள்ளிக்கிழமை பகலில் அறிவிக்கக்கூடியதாக இருக்குமென தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க தெரிவித்துள்ளார்.

மோசடி நடவடிக்கை அல்லது வன்முறை நடைபெறும் பட்சத்தில் குறிப்பிட்ட வாக்களிப்பு நிலையத்தில் வாக்குகள் ரத்துசெய்யப்பட்டு 19 திகதி சனிக்கிழமை புதிதாக வாக்களிப்பு இடம்பெறுமென ராஜகிரியவிலுள்ள தேர்தல் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மறுவாக்குப்பதிவு இடம்பெறும்பட்சத்தில் இறுதிமுடிபு வெளியிடப்படுவது தாமதமாகும். வாக்களிப்பு 17 ஆம் திகதி காலை 7 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நடைபெறும். வாக்கு அட்டைகள் மூலம் வாக்காளர்களை வழிநடத்தும் நடவடிக்கைகள் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன. வாக்காளர் அட்டையில் வாக்களிப்பு நிலையம், நேரம், தினம் என்பனவும் அவர்களின் பதிவு இலக்கங்களுமே குறிக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் தேர்தல் உத்தியோகத்தர்களுக்கும், வாக்காளர்களுக்கும் இடையில் தொடர்புகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படுகின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாக் கடற்பரப்பில் மர்மக் கப்பல் நடமாட்டம்

### முப்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ். குடாக் கடற்பரப்பில் மர்மக் கப்பல் ஒன்று சென்றதாக முப்படைத் தளபதி தயா சந்தகிரி தெரிவித்துள்ளார்.

இக்கப்பல் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களைக் கொண்டுசென்றிருக்கலாமென அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

அக்கப்பலைத் தேடும் முயற்சியில் கடற்படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும், எனினும் கப்பல் சென்ற திசை குறித்து அறியமுடியவில்லை என்று தயா சந்தகிரி தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நாளின்போது தம் மீதான தாக்குதலுக்கான திட்டமிடலாக இது இருக்கக்கூடுமென்று கூறிய தயா சந்தகிரி, இந்தத் தாக்குதல்களை மேற்கொள்ளவந்த விடுதலைப் புலிகள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் என்றும் கூறினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பாதுகாப்புப் பணியில் பொலிஸாருடன் இராணுவம்

(கொழும்பு)

நாளை மறுதினம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் பாதுகாப்பிற்கு பொலிஸாருக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குவதாக யாழ்ப்பாண இராணுவப் பிரிவின் கட்டளைத் தளபதி ஜெனரல் சுனில் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இதன்படி பல பிரிவுகளில் இராணுவ வீரர்களைக் கடமையில் அமர்த்தவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

வாக்காளிப்பு நிலையங்களுக்கு அருகில் மேற்கொள்ளப்படுகின்ற நாசகார வேலைகளைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கு உதவி வழங்கவுள்ளோம்.

வீதித் தடைகளையும் மற்றும் ரோந்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள 180 வாக்களிப்பு நிலையங்களிலும் கடமையாற்றும் அதிகாரிகளுக்கும்; வாக்களிப்பில் கலந்துகொள்ளும் பொது மக்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதற்கு இயன்றளவு ஒத்துழைப்பினை வழங்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச–4)

## தேர்தல் மோசடியில் ஈடுபட யாழில் தீவிர முயற்சிகள்

### முன்னாள் இராணுவத்தளபதி சரத் முனசிங்க

(கொழும்பு)

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளைப் பயன்படுத்தி யாழில் தேர்தல் வாக்குமோசடிகளில் ஈடுபடும் செயற்திட்டம் குறித்துத் தகவல் ஒன்று வெளியாகியுள்ளதாக முன்னாள் இராணுவ அதிகாரியும், ஐக்கிய தேசியக் கட்சியின் பொல்காவல தொகுதி அமைப்பாளருமான மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ ஏயார்
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# ஜனாதிபதித் தேர்தலன்று...

*ராஜபக்ஷ வெளிப்படையான கொடிய சிங்கம் ரணிலோ சாதுவாக படுத்துறங்கும் கொடிய விஷப்பாம்பு*

இலங்கைச் சிங்கள மக்களின் ஐந்தாவது ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் திருவிழா ஆரம்பித்து தற்போது அது உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு கையாலாகாத் தனம் மிக்கதும் சிங்கள மக்களைப் பொறுத்தவரை நிறைவேற்று அதிகாரம் கொண்டதுமான ஒரு ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 17 ஆம் திகதி அரங்கேறவுள்ளது.

ஆளும் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவினதும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினதும் தமிழ் விரோதம் நிரம்பிய முன்னைய செயற்பாடுகளும் தற்போதைய தேர்தல் பிரசாரங்களும் தமிழ்மக்களை ஆழமாக சிந்தித்து முடிபுகளை எடுக்கவேண்டிய ஆபத்தான நிலைக்கு தள்ளியுள்ளது.

தென்னிலங்கையெங்கும் பரபரப்பாகிறது. ஆனால் வடகிழக்கு மௌனித்து பார்வையாளர்கள் ஆகின்றது. நீண்ட வரலாற்றுக் காலங்களாக இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் எமக்குரிய வாழ்விட பிரதேச மொழி கலாசார பாரம்பரியங்களைக் கொண்டிருக்கின்ற ஒரு தேசிய இனம் இலங்கையின் ஜனாதிபதியொருவரை தேர்ந்தெடுக்கின்ற தேர்தலில் நம்பிக்கை இழந்து ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கும் அளவுக்கு தமிழ்த்தேசிய இனம் மன்னிக்க முடியாத அளவிற்கு சிங்களத்தலைமைகளால் மிக மோசமாக வஞ்சிக்கப்பட்டுள்ளமை ஒரு கசப்பான வரலாற்று உண்மை.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரித்து ஒரு துக்க தினமாக ஒரு கரிநாளாக அனுஷ்டிக்கும் அளவிற்கு தமிழ்த்தேசிய இனம் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரண்டு பிரதான கட்சிகளாலும் ஒடுக்கப்பட்டு அழிக்கப்பட்டு விரக்தியின் எல்லைக்கு அப்பால் தள்ளப்பட்டுள்ளனர்.

*தமிழ் மக்களின் தேர்தல் பகிஷ்கரிப்பு*

நாம் கடந்த நான்கு ஜனாதிபதிகளை தெரிவு செய்வதற்காக வாக்களித்து வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கசப்பான அனுபவங்களை நிறையவே சந்தித்திருக்கிறோம். சிங்களத் தலைவர்கள் கடந்த காலங்களில் எமக்கு வாக்குறுதிகளை தந்து எமது வாக்குகளைப் பெற்றுக்கொண்டு எமக்கு இழைத்த கொடுமைகள் தமிழ் மக்களைப் பொறுத்த வரை பச்சைக் குழந்தையென்று பாலூட்டி வளர்த்த பாம்பாக கொத்திய வரலாற்று வடுக்களை எங்கள் மனங்கள் இன்னமும் வேதனையோடு சுமந்து கொண்டு தான் இருக்கின்றது.

இதனாலேயே ஐந்தாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் விவகாரம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு தீண்டத்தகாத நிகழ்வாக அனுஷ்டிக்கப்பட இருக்கின்றது.

ஆட்சி அதிகாரத்திற்கு உரியவர்களை நீதியான வழியில் தெரிவு செய்வதற்கு தேர்தல்கள் உயிர் நாடியானவை என்பதில் எமக்கு மாற்றுக்கருத்து எதுவும் கிடையாது. அந்தத் தேர்தலில் வாக்குரிமையுள்ள ஒவ்வொருவரும் வாக்களித்து தாம் விரும்பியவரை தெரிவு செய்வதென்பது ஒவ்வொருவரதும் அடிப்படை உரிமை.

ஒவ் வொருவரதும் பிறப்புரிமை ஒவ்வொருவருக்கும் உரிய ஜனநாயக உரிமை. அந்த விடயத்திலும் எமக்கு மாற்றுக் கருத்தெதுவும் கிடையாது. ஆனால் இலங்கையில் தமிழ் மக்களாகிய எமக்கு குட்டக் குட்ட குனிகின்ற உரிமையைத் தவிர வேறெந்த உரிமையையும் சிங்கள ஆட்சியாளர்களும் சிங்கள அரசியல் வாதிகளும் கடந்த 57 வருடங்களாய் விட்டு வைக்கவில்லை.

80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறவுகள் சிங்கள தேசத்தால் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட போது , பல்லாயிரம் எமது உறவுகள் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டபோது,பல நூற்றுக்கணக்கான எமது சகோதரிகள் பாலியல் கொடூரங்களுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டபோது எமது கருத்துச் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம், இயல்பாக வாழ்வதற்கான சுதந்திரங்கள் நசுக்கப்பட்டபோதெல்லாம் மனித உரிமை பற்றி ,அடிப்படை உரிமை பற்றி,பிறப்புரிமை பற்றி,ஜனநாயக உரிமை பற்றி உலகில் யாரும் அலட்டிக்கொள்ள வில்லை.

சுருக்கமாகச் சொன்னால் மேற்குலக நாடுகளில் மிருகங்களுக்கு உள்ள சுதந்திரத்தில் பாதி கூட இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு கிடையாது. இது இப்படி இருக்க எங்களுக்கு பயனே இல்லாத மாறாக படு பாதகம் விளைவிக்கின்ற இனவெறி பிடித்த சிங்களப் பேரினவாதிகளை தெரிவு செய்கின்ற தேர்தல் விவகாரத்தில் நாம் எமது வாக்குரிமை பற்றி சிந்திப்பதும் ஒரு அர்த்தமற்ற செயற்பாடே ஆகும்.தமிழ் மக்களாகிய நாங்கள் இந்த நாட்டின் தேசிய பூர்வீகக்குடிகள். எமக்கென்றதொரு பாரம்பரிய வாழ்விட தாயக நிலப் பரப்பொன்று உண்டு.

பழம்பெருமை மிக்க மொழி, கலாசார பண்பாட்டு விழுமியங்கள் உண்டு. வரலாற்றுக் காலம் தொட்டே இந்த நாட்டின் பெரும்பான்மை இனத்திற்குரியது போன்ற அனைத்து அம்சங்களுடன் நாமும் வாழ்ந்து வருகின் றோம்.

*சிங்களத்தலைமைகளின் சுயநல நோக்கு*

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரித்தானிய கைகளில் இருந்து இலங்கை ஆட்சி அதிகாரம் சுதேசிகளின் கைகளுக்கு மாறிய போது அது பெரும்பான்மைச் சிங்களவர்களின் கைகளில் சிக்கிக்கொண்டது.

அதிகாரப் பசியும் தூரநோக்கற்ற அரசியல் பார்வையும் குறுகிய சுயநலநோக்கும் கொண்ட அப்போதைய சிங்கள அரசியல் தலைமைகளின் விவேகமற்ற செயற்பாடுகளின் பரிணாமமே இன்று கொழுந்து விட்டெரியும் இலங்கையின் இனப்பிரச்சினை.

அதாவது அன்று அரசியல் அரங்கில் இருந்த பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அதிகார வெறியில் தமிழ் –சிங்கள மக்களிடையே முரண்பாடுகளை தாமாக உருவாக்கினர்.

தமிழ் மக்கள் சிங்கள மக்களின் பரம எதிரிகள் என உருவகப்படுத்தி இனக்கலவரங்களையும் வன்முறைகளையும் உருவாக்கி வளர்த்தனர். அதேநேரம் தமிழ் மக்களின் தேசியத்தை சிதைத்து மொழி ,கலாசார விழுமியங்களைப் பலவீனப்படுத்தி சிங்கள மக்களின் ஆதரவைத் தேடிக்கொண்டனர்.

அதாவது சிங்கள மக்களின் அதிக ஆதரவைப் பெறுவதற்காக இரண்டு கட்சிகளும் போட்டி போட்டுக்கொண்டு அதி உச்ச இனவாதத்தை வெளிப்படுத்தி தம்மை தீவிர தமிழ் விரோதிகள் ஆகவும் தாமே சிங்கள மக்களதும் சிங்கள தேசத்தினதும் காவலர்களாக ; நாயகர்களாக சிங்கள மக்களுக்கு வெளிப்படுத்தி மாறி மாறி மகுடம் சூடிக் கொண்டனர்.

மறுக்கப்பட்ட தமிழ் மக்களின் உரிமைகளைவேண்டி தமிழ்த் தலைவர்கள் குரல் கொடுத்த போதெல்லாம் ஆட்சியில் இருப்பவர்கள் தீர்வு பற்றி சிந்திக்க முயன்றால் உடனே எதிர்க்கட்சியினர் தமிழ் மக்களுக்கு ஏதேனும் கிடைத்து விடுமோ என்ற அச்சத்தில் பதறடித்து உண்ணா விரதம், ஊர்வலம் என ஊளையிட்டு தமிழ் மக்களுக்கு உருப்படியாக எதுவும் கிடைக்காதபடி பார்த்துக்கொள்வது இரண்டு கட்சிகளினுடைய மரபாகி விட்டது.

*ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சி*

இதுவே இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு இன்றுவரை தடம் புரளாமல் நடைபெற்று வருகின்றது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு 30 ஆண்டுகள் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சியின் கீழும் 27 வருடங்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியின் கீழும் இருந்துள்ளது.

ஆனால் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரண்டு கட்சிகளைச் சார்ந்தவர்களும் தமிழ் மக்களிடம் இருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை மீளக்கொடுக்க விரும்பாதவர்களாக இருந்தது மட்டுமன்றி தமிழ் மக்களை பூண்டோடு அழிக்கின்ற முயற்சியிலேயே அதிககவனம் செலுத்தினர்.

1949 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்த டி.எஸ். சேனநாயக்கா இந்திய –பாகிஸ்தான் பிரஜா உரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்து ஆயிரக்கணக்கான மலையகத் தமிழ் மக்களை நாடற்றவர்களாக்கியதுடன் தமிழ் மக்களின் பூர்வீக பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை திட்டமிட்டு ஏற்படுத்தியவர்.

1956ஆம் ஆண்டு சிங்கள ஸ்ரீ சட்டத்தை ஐக்கிய தேசியக்கட்சி தமிழ் மக்களுக்கு எதிராக நடைமுறைப்படுத்தியது பிராந்திய சபைகளை அமைப்பதன் மூலம் தமிழ் மக்களின் சில பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவென 1957ஆம் ஆண்டு அப்போது ஆட்சியில் இருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சார்ந்த பண்டாரநாயக்காவிற்கும் எஸ்.ஜே.வி. செல்வநாயத்திற்கும் இடையே பண்டா –செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இதனைக் கண்டு பொறுக்காது எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக்கட்சியும் புத்த பிக்குகளும் எதிர்ப்புத் தெரிவித்து கண்டிக்கு யாத்திரை மேற்கொண்டு ஒப்பந்தத்தை கிழித்தெறியச் செய்தனர். 1965 ஆம் ஆண்டு மீண்டும் ஓர் தீர்வு முயற்சியாக ஐக்கிய தேசியக்கட்சியைச் சார்ந்த பிரதமர் டட்லிசேனநாயக்காவிற்கும் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்திற்கும் இடையே டட்லி–செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானது. இதனை எதிர்த்து புத்த பிக்குகளும் எதிர்கட்சியாக இருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அதன் கூட்டணிகளும் இணைந்து கண் டன ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடாத்தி ஒப்பந்தத்தை கிழித்தெறியச் செய்தனர்.

1987 ஆம் ஆண்டு இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தை வெளிநாட்டு படைகளை பயன்படுத்தி கையாளும் நோக்கோடு அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஐக்கிய தேசியக்கட்சியைச் சார்ந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு இந்தியப்படைகளை வரவழைத்து நிலைமைகளை மேலும் மோசமாக்கினார்.

நீண்ட கால போரின் அழிவுகளைச் சந்தித்த பின்னர் பட்டது போதும் என்ற நிலையில் இந்தியப்படை நாடுமீண்டது.

*சந்திரிகாவின் ஆட்சிக்கு ரணிலின் ஆதரவு*

1994 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சார்ந்த சந்திரிகா அம்மையார் தமிழ் மக்களின் துன்ப துயரங்களை தான் சரியாக புரிந்து கொண்டதாகவும் தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ் மக்களும் இந்த நாட்டில் சமஉரிமையுடன் வாழ்வதற்கு ஏற்ற வகையில் இனப்பிரச்சினையை பேச்சு மூலம் தீர்க்கப்போவதாகவும் மாயா ஜாலங்கள் காட்டி ஆட்சி பீடம் ஏறியவர். தேர்தல் வாக்குறுதிகளைக் கை விட்டு போர்மூலம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப்போவதாக கூறி வெறி கொண்டு ஆடினார்.

தமிழ் மக்களை அழித்தொழிக்க ரிவிரச இராணுவ நடவடிக்கை தொடக்கம் ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை வரை முழு மூச்சாக மேற்கொண்டுஅனைத்திலும்தோல்வியடைந்து இன்று மீண்டும் சுடலை ஞானம் வந்து பேச்சுமூலமான தீர்வு பற்றியும் சமஷ்டித் தீர்வு பற்றியும் பிதற்றுகின்றார்.

தனது ஆட்சியின் போது அரை குறை தீர்வுத்திட்டத்தை உருவாக்கி தமிழ் மக்களுக்கு திணிக்க முற்பட்டார். எனினும் பௌத்த சிங்கள கடும்போக்குடைய ஜே.வி.பி ,ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் கடும் எதிர்ப்பினாலும் தமிழ் மக்களுக்கு உருப்படியாக ஏதேனும் கிடைத்து விடுமோ என்ற அச்சத்தில் ஐக்கிய தேசியக்கட்சியும் அதற்கு ஆதரவளிக்காது விடவே முயற்சிகள் கைவிடப்பட்டன.

சந்திரிகா அம்மையார் போர்மூலமான வழிமுறைகள் அனைத்திலும்தோல்வியடைந்து எஞ்சியிருந்த காலத்தில் பிரச்சினையை பேச்சுமூலம் தீர்க்க மேற்கொண்ட அரைகுறையான முயற்சிகளும் எதிர்க்கட்சித்தலைவர் ஆதரவளிக்காது முட்டுக்கட்டையாக இருந்ததுடன் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டவர் போல பாசாங்கு செய்து நீண்ட நோக்கில் ஒரு சதிநாடகத்தை ஆரம்பித்தார்.

தமிழ் விரோத உணர்வுகள் நிரம்பிய ரணில் விக்கிரமசிங்க பொதுஜன ஐக்கிய முன்னணி வசமிருந்த ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு இலகுவான வழி தமிழ் மக்களின் வாக்குகளை கவருவதுதான் என்பதனை சரியாக கணக்கு பார்த்துக் கொண்ட அவர் அதனை அடைவதற்கு பின்பற்றிய உத்தி முறைகளே அவரை தமிழின சார்புள்ளவராக வெளிக்காட்டியது.

இதற்காக அவர் அவ்வப்போது புலிச்சாயத்தையும் பூசிக்கொள்ளத்தவறவில்லை. ஆட்சி அதிகாரம் தன் கைக்கு வந்தால் பேச்சு மூலமாக இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமஷ்டி முறையை ஏற்படுத்தப்போவதாக கூறியவர் 2001 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் கூட்டுக்கட்சிகளின் ஆதரவோடு வெற்றி பெற்று பிரதமர் ஆனார்.

அதன் பின்னர் தனது மறை முகத்திட்டங்களை படிபடியாக அமுல்படுத்தத் தொடங்கினார். சீரழிந்து போயிருந்த இலங்கையின் பொருளாதாரத்தை சீரமைக்கவும் பலவீனப்பட்டிருந்த இலங்கையின் பாதுகாப்பு படைகளின் மூன்று பிரிவுகளையும் மீளக்கட்டியெழுப்பவும் பலமான நிலையில் உள்ள விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தவும் என எல்லாவற்றுக்குமாக அவருக்கு நீண்ட இடைவேளை தேவைப்பட்டது.

அந்த இடைவேளை 2002 ஆம் ஆண்டு மாசி மாதம் 22 ஆம் திகதி கைச்சாத்தான போர்நிறுத்த உடன்பாட்டோடு ஆரம்பமானது. இலங்கை அரசினால் சமாளிக்க முடியாது இருந்த புலிகளின் உக்கிரமான போர்நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு அரசு ஓர் போர் ஓய்ந்த நிம்மதியான சூழலுக்குள் பிரவேசித்தது.

இந்த இடைவேளையைப் பயன்படுத்தி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் சர்வதேச பிரசாரங்களை அதி தீவிரமாக மேற்கொண்டு சர்வதேச ரீதியாக தமிழ் மக்களை தனிமைப்படுத்தி பலவீனப்படுத்தி புலிகளை சர்வதேச சதிவலையில் சிக்கவைத்துள்ளார். அதேவேளை தமிழ் மக்கள் தமது உரிமைகள் தொடர்பாக உறுதியுடன் நிற்பார்கள் ஆயின் தமது பொருளாதார இராணுவ பலம் சீர்செய்யப்பட்டதும் தமிழ்மக்கள் மீது வலிந்து ஒரு போரைத்திணித்து அதில் அமெரிக்கா,இந்தியா போன்ற நாடுகளை ஈடுபடுத்துவதற்குரிய ஏற்பாடுகளையும் ரணில் விக்கிரம சிங்க திட்டமிட்டு மேற்கொண்டுள்ளார்.

*விலகிய கருணாவை அணைத்த ரணில்*

ஒழுக்க சீர்கேடு காரணமாக புலிகளால் தமது அமைப்பில் இருந்து நீக்கப்பட்ட கருணாவை வாரிக்கட்டியணைத்து புகலிடம் கொடுத்து ஆயுதங்கள் வழங்கி புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தத்தை உருவாக்கி வளர்ப்பதற்குரிய முழுமையான ஏற்பாடுகளையும் ரணில் விக்கிரம சிங்க நேரடியாக முன்னின்று வழிநடத்தினார்.

யுத்த நிறுத்த காலத்தில் தமிழ் மக்களுக்கு சரக்குச்சாமான்கள் ஏற்றி வந்த சரக்கு கப்பல்கள் நான்கை விமானத்தாக்குதல் மூலம் மூழ்கடித்துள்ளார். சமாதான விரும்பியாக தன்னை சித்திரித்துக் காட்டும் ரணில் விக்கிரம சிங்க மேற்படி தமிழ் விரோத நடவடிக்கைகளைச் செய்தமை அவர் கட்சி சார்ந்த முக்கிய உறுப்பினர்கள் மிலிந்த மொறகொட டெய்லி மிரர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெளி வாகத் தமது தலைவரின் வீர சகாசங்களாக மேற்படி விடயங்களைக் கூறியுள்ளமையும் நுவரேலிய மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி எம்.பியும் காலம் சென்ற ஒரு தமிழின விரோயுமான காமினி திஸநாயக்காவின் மகனுமான நவீன் திஸநாயக்கா மேற்படி சதி முயற்சிகள் தமது தலைவரின் சாதனைகளைச் சிங்கள மக்களுக்குக் கூறியுள்ளமையை விட வேறு சான்றுகள் ரணிலின் உண்மையான முகத்தினை புரிந்துகொள்ள அவசியமில்லை.

*தமிழ் மக்களின் முடிவு*

கடந்த கால் கசப்பான நிகழ்வுகள் அப்படியே தொடர்கின்றது. மீண்டும் தேர்தல் என்ற அர்த்தமற்ற நிகழ்வொன்று தமிழரின் முன் பிரதமர் மகிந்தவோ ரணில் விக்கிரமசிங்கவோ தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிப்புத் தொடர்பில் உருப்படியான விடயம் எதையும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கவில்லை.

மாறாக மகிந்த பௌத்த சிங்கள பிற்போக்கு இடது சாரிக்கட்சியான ஜே.வி.பி.,ஹெல உறுமய ஆகிய தமிழ் விரோத சிங்கள கட்சிகளின் தமிழ் விரோத நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு அவர்களுடன் புரிந்துணர்வு உடன்டிக்கை கைச்சாத்திட்டு அதி உச்சபேரினவாதத்தைக் கக்கி சிங்கள மக்களின் ஆதரவைத்திரட்டி வருகின்றார்.

ரணில் விக்கிரம சிங்க இதே நிலைப்பாட்டில்இருக்கின்ற ஒருவர்தான். அவர் ஒரு பட்டைதீட்டப்படாத பேரினவாத தலைவர். இலகுவில் இனங்காண முடியாத தந்திரம் நிரம்பிய இன வெறிபிடித்த சிங்களத் தலைவர். இருவரும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களான பாதுகாப்புப்படையை நவீன மயப்படுத்தல்,எல்லைப்புற கிராம சிங்கள மக்களுக்கு ஆயுதங்களை வழங்குதல், பெரும்பான்மை மக்களின் ஆதரவோடு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுதல் என்பன பெரும்பான்மை சிங்கள மக்களின் நலனை முன்னிறுத்தி தமிழ் மக்களின் நலனை புறக்கணிக்கின்ற ஒரு இனவெறி மிகுந்த செயற்பாடாக காணப்படுகின்றது.

ரணிலும் மகிந்தவும் வேறு வேறு கட்சியாகவிருந்தாலும் அவர்கள் இருவரையும் தமிழின விரோத மனப்பாங்கு ஒன்றாக பிணைத்து நிற்கிறது. நாம் மீண்டும் ஏமாற தயாராக இல்லை. எமக்கென்றதொரு பாதுகாப்பு படை இருக்கின்றது.

பிறகு எதற்கு வேறு நாட்டு இனவாதிகளுக்கு எமது வாக்குகளை கொடுத்து துன்பத்தை விலைக்கு வாங்க வேண்டும்.

வோட்டுக்களைக் கொடுத்து பெற்றுக் கொண்ட வேட்டுக்கள் இனிப்போதும். விழித்தெழுவோம் ,புறக்கணிப்போம் இந்தத் தேர்தலை.

தேர்தல் தினத்தை துக்க தினமாக கரிநாளாக அனுஷ்டித்து சிங்கள தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் எமது உரிமைக்கான தேவையின் பரிணாமத்தை தெளிவாக புரியவைப்போம்.

சந்தர்ப்ப சூழ்நிலையின் கைதிகளாய் வாக்களிப்பு நிலையத்திற்கு செல்ல நேரிடின் அந்த வாக்குகளை செல்லுபடியற்றதாக்குவோம்.

(ச-12)

# கதிர்காமரைக் கொன்றது ஜே.வி.பியே

# புலிகள் மீதான தடைகளை நீக்குமாறு ஐரோ.ஒன்றியத்திடம் தமிழ் அமைப்பு மனு

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன கதிர்காமரைக் கொன்றது சிங்களப் பேரினவாத அமைப்பான ஜே.வி.பி. தான் என்று ஐரோப்பிய ஒனறியத்திடம் ஐரோப்பா வாழ் தமிழர்கள் முறைப்பாட்டு மனுவொன்றை அளித்துள்ளனர்.

அமைதிக்கான ஐரோப்பிய தமிழர் முன்முயற்சி அமைப்பின் சார்பில் கையளிக்கப்பட்டுள்ள அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குப் பின்னா தமது அரசியல் அபிலாஷைகளுக்கு லக்ஷ்மன் கதிர்காமர் தடையாக இருப்பார் என்பதால் ஜே.வி.பி.யினர் அவரை படுகொலை செய்துள்ளனர்.

தமது கவனத்திற்கு வராமல் ஜே.வி.பியுடன எதுவித சந்திப்புகளையும் மேற்கொள்ள வேணடாம் என்று கதிர்காமருக்கு சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டிருந்தார். இருப்பினும் சந்திரிகாவின் அரசியல் சகாப்தம் முடிவடைவதால் ஜே.வி.பி.யுடன் கதிர்காமர் நெருக்கமான உறவுகளையே கொண்டிருந்தார். ஜே.வி.பி.மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின ஆதரவுடன் தனது அரசியல் எதிாகாலத்தைத் தொடர லக்ஷ்மன் கதிர்காமர் திட்டமிட்டிருந்தார்.

லக்ஷ்மன கதிர்காமர் படுகொலை செய்யப்பட்ட இரு மணிநேரம் கழித்தே பொலிஸார் அவரது இல்லத்தில சென்று சோதனையிட்டனர். நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவை. இந்த படுகொலையில் இலங்கை அரசுக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் தான் தொடர்பும் உள்ளது.

ஸ்கொட்லாந்து யார்ட் புலனாயவுத்துறையினர் இந்தப் படுகொலை தொடர்பில் விசாரணையை நடத்த முன்வந்தபோது சந்திரிகா குமாரதுங்க ஏன் மௌனம் காத்தார்?

கதிர்காமர் படுகொலையைக் காரணம் காட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் பயணத்தடையை விலக்க வேண்டும.அந்த முடிவு ஒருதலைபட்சமானது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நீடிக்கவும் அமைதி முயற்சிகள் தொடரவும் ஐரோப்பிய ஒன்றியமானது விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில இணைக்கக் கூடாது. இங்கிலாந்து நாட்டில் விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடை நீக்கப்படவேண்டும். தமிழ் அரசியல் தலைவா்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளாகள், பொதுமக்கள் மீதான படுகொலைகள் தொடர்பாக சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அந்த மனுவில வலியுறுத்தப்பட்டுள்ளது. (ற)

## திருட்டு

(திருநெல்வேலி)

திருநெல்வேலி கிழக்கு பூதவராயர் வீதியில் உள்ள வீடொனறில் அண்மையில் விசித்திரமான முறையில் திருட்டுச்சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வீட்டு உரிமையாளர்களுக்குத் தெரியாமல் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அவ்வீட்டின் சுவாமி அறையினுள் சென்று மதுவகைகளை அருந்தியும், சிகரெட் புகைத்தும் எல்லோரும் உறங்குமவரை பொழுதைக் கழித்துள்ளனர்.

வீட்டார் உறங்கியதும் அங்கிருந்த பெறுமதியான பொருட்களைச் சுருட்டிக்கொண்டு தப்பிச்சென்றுவிட்டனர்.

காலையில கண்விழித்த வீட்டு உரிமையாளர்கள் சுவாமி அறையினுள் கிடந்த சாராயப் போத்தல்கள், சிகரெட்துண்டுகளைப் பாாத்து அதிர்ச்சியடைந்தனர். அதன் பின்பே அவர்களுக்கும் தம் வீட்டில் திருட்டுப் போனமை தெரியவந்தது.

(த-132,133)







# முஸ்லிம்களை முஸ்லிம்களே ஆட்சிசெய்ய ஜனாதிபதித் தேர்தலை பயன்படுத்த வேண்டும்

## -பஸீர் சேகுதாவூத்

இந்த நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றது போல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெறவில்லை. போர்ச்சூழல், முஸ்லிம்களுக்கான அநீதிகளும் இழைக்கப்பட்ட காலகட்டத்தில் முஸ்லிம்களுக்கான அரசியல் முகவரி தேடிய காலகட்டத்தில்தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உதயமானது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ப்ஸீா சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காத்தான்குடியில் ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் காத்தான்குடி மத்திய குழுவினால் நடாத்தப்பட்ட தேர்தல பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொள்வது அபிவிருத்தி அரசியலை மேற்கொள்வது இந்தக் கட்சிகளின் நோக்கமில்லை.

மாறாக முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையும் முஸ்லிம் சமூகததின் அரசியல் விடுதலையுமே இக கட்சியின் நோக்கமாகும்.

முஸ்லிம் சமூகம் தமது இறுதி இலக்கை அடைந்து கெள்ளும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. முஸ்லிம்களே முஸ்லிம்களை ஆட்சிசெய்யும் சுயாட்சியைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முஸ்லிம்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)

## இராசிபலன்

**15.11.2005**
**(ஐப்பசி 29, செவ்வாய்க்கிழமை)**
**சதுர்த்தசி முற்பகல் 7.35மணிவரை**
**பரணி பின்னிரவு 1.30 மணி வரை**
**இராகுகாலம்3.07-4.37 மணிவரை**
**சுபநேரம்10.37-12.07 மணிவரை**
**பூரணை விரதம்.**

| | |
|---|---|
| மேடம் | கற்பனை மிகுதி, நண்பர்கள் சந்திப்பு, நல்ல காரியம், விருந்துபசாரம். |
| இடபம் | காரிய அலைச்சல், உறவினர் மனஸ் தாபம், சுபசெலவு, வேலைச்சுமை. |
| மிதுனம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், நண்பர்கள சந்திப்பு, சுபநிகழ்வுகள், பொருள் சேர்க்கை. |
| கடகம் | அதிகாரம், நல்லகாரியம், நண்பர்கள் உதவி, போசன சுகம். |
| சிங்கம் | புதிய திருப்பம், இடமாற்றம், கட்டுப்பாடு, முயற்சி தாமதம். |
| கன்னி | வேலைச்சுமை, காரிய தடங்கல், உறவினர் வெறுப்பு, உடல்நலக்குறைவு. |
| துலாம் | காரிய அனுகூலம், மாதர்நட்பு, தெய்வ சிந்தை, நல்ல செய்தி. |
| விருச்சிகம் | தொழில் ஆர்வம், போசன சுகம், ஆரோக்கியம், முயற்சி கைகூடும். |
| தனுசு | வியாபாரசிந்தை, புத்திரரால் கவலை, பூர்வபுண்ணிய கருமம், பணத்தட்டுப்பாடு. |
| மகரம் | தாய்வழி உறவு, மனச்சோர்வு, தொழில் விருத்தி, காரிய தாமதம். |
| கும்பம் | அந்நியர் சந்திப்பு, முயற்சி கைகூடும், விருந்துபசாரம், புதிய தகவல். |
| மீனம் | வீண்பகை, காரிய தாமதம், குடும்பக் கவலை, விவாதம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
- வளவன்

## 'ஹலோ ட்ரஸ்ட்' ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்

ஹலோ ட்ரஸ்ட் அமைப்பைச் சேர்ந்த நான்கு ஊழியர்கள் எவ்விதமான காரணமின்றி கடந்த வெள்ளிக்கிழமை வேலை நீக்கம் செய்யப்பட்டதையடுத்து நேற்றுக் காலை 6 மணி முதல் மேற்படி நிறுவன ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை மேற்படி நிறுவனத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட வேலைநீக்கங்கள் அனைத்தையும் உடனடியாக இரத்துசெய்ய வேண்டும். வேலை ஒப்பநதம உடனடியாகத் திருத்தியமைக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் எந்தவொரு உழியரும் வேலை நீக்கம செய்யப்படக்கூடாது. இதுவரை காலமும் வெடிவிபத்து, பாதுகாப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படாத ஊழியர்களுக்கு அவை உடனடியாக வழங்கப்பட வேண்டும ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ற-132,133)

## ரணிலுக்கு எஸ்.பி கடிதம்


(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அரச ஊடகங்கள் மேற்கொண்டுவரும் எதிர்க் கடசித்தலைவருக்கு எதிரான பிரசாரங்களைக் கொண்டு அச்சம்கொள்ளத் தேவையில்லை.

சுனாமி நிதியை கொள்ளையிட்டவர்களும் கொலைஞர்களும் இந்த தேர்தலில் மக்களை ஏமாற்ற நினைககின்றார்கள் எனக் குறிப்பிட்டுள்ள எஸ்.பி.இந் நிலையில கடைசி இரவில் ரணில் விக்கிரமசிங்க மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டியதன் அவசியத்தையும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-8)







நான்கு ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டதையிட்டு யாழ்ப்பாணம் ஹலோ ட்ரஸ்ட் அலுவலகம் முன் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதையும் அவர்களோடு யாழ். பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் கலம் பீபிள்ஸ் கலந்துரையாடுவதையும் நாவலர் வீதியில் அமைந்துள்ள தலைமைக்காரியாலய கதவுடைக்கப்பட்டு வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.ரி.ராஜா, தெ.திலீப்)

# இன்று ஒரு தகவல்

## தலைவர் ஆகும் தகுதிகள்

எனது நண்பர் ஒருவர் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். என்ன யோசனை செய்கிறீர்கள்...என்று கேட்டேன். தலைவர் ஆகலாம் என்று பார்க்கிறேன்.. அதுதான் அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறேன்'' என்றார். "நான் கூட அது போல் யோசித்துப் பார்த்தேன்.அதற்குப்பின் அந்த யோசனையைக் கைவிட்டுவிட்டேன்'' என்றேன். "ஏன்?" என்று கேட்டார். அதற்கான தகுதிகள் எனக்கு இல்லை என்பது என்னைவிட மற்றவர்களுக்கு நன்கு புரிந்து விட்டது. அதனால் பேசாமல் இருந்துவிட்டேன்" என்றேன்.

"தலைவர் ஆவதற்குதகுதிகள் வேறு உண்டா?'' என்று கேட்டார். அவர் யதார்த்தமாகத்தான் கேட்டார். நான் உடனே என்னிடமிருந்த ஒரு புத்தகத்தை எடுத்து அவரிடம் கொடுத்தேன். "படித்துப் பாருங்கள்'' என்று. தலைவர் ஆவதற்கு என்ன வழி என்பதைப் பற்றி அதில் போட்டிருந்தார்கள்.முதல் வழி என்ன தெரியுமா?

நான்கு பேருக்கு முன்னால்... இல்லாவிட்டால் ஒரு கூட்டத்தில் நீங்கள் பேசப்போகிறீர்கள் என்றால் அப்போது எப்படி ஆரம்பிக்க வேண்டும்?... உண்மையான புகழ்ச்சி நேர்மையான பாராட்டு இவற்றோடு ஆரம்பிக்க வேண்டும். எடுத்ததுமே அது சரியில்லை இது சரியில்லை என்று பேசிக்கொண்டிருக்கக்கூடாது. மக்களைப் பார்த்து நீங்கள்தான் தவறு செய்துவிட்டீர்கள் என்று நேரடியாகக் கூறக்கூடாது. அதை மறைமுகமாக ஏதாவது கதை கூறி அதிலிருந்து அவர்கள் புரிந்து கொள்வது போல் செய்யவேண்டும்.

அடுத்தவர்கள் செய்த தவறு என்னவென்று அலசுவதற்கு முன்பு நீங்கள் செய்த தவறு என்ன வென்பதைப் பற்றியே பேசுங்கள். எதற்கும் நேரடியாக உத்தரவு போட்டுக்கொண்டிருக்காதீர்கள். இதை நீங்கள் செய்ய வேண்டும் என்று சொல்வதற்குப் பதிலாக "இதை நீங்கள் இப்படிச் செய்தால் எப்படி இருக்கும்? என்று கேள்வி மாதிரி கேட்கவேண்டும். இப்படிக் கேட்டால் அது உத்தரவு மாதிரி இருக்காது. அடுத்தவர்களின் மரியாதையைக் காப்பாற்றுவது போல் பேசவேண்டும். உங்கள் பேச்சு இன்னொருவரை அவமானப்படுத்துவது போல் இருக்கக்கூடாது.

ஏன்தான் இவரிடம் போய் மாட்டினோமோ என்று யாரும் நினைத்து விடக்கூடாது . ஒவ்வொரு சிறிய வளர்ச்சியையும் பாராட்ட வேண்டும். வெற்றி சாதாரணமாக இருந்தாலும் பாராட்டாமல் இருக்கக்கூடாது. பாராட்டும்போது தாராளமாக இருங்கள் குறைகூறும் போது கவனமாக இருங்கள்... வாய்க்கு வந்தபடி பேசிவிட்டால் அதன்பின் வகையாக மாட்டிக் கொண்டு முழிக்கவேண்டிவரும்.

நீங்கள் பேசுவது இன்னொருவருக்கு ஒரு கௌரவத்தையும் மரியாதையையும் உண்டாக்குவது போலிருக்க வேண்டும். நீங்கள் பேசுவது அடுத்தவர்களுக்கிருக்கும் கொஞ்சநஞ்ச மரியாதையையும் கெடுத்துவிடுவது போலிருக்கக்கூடாது. உங்கள் பேச்சை கேட்பவர்களுக்கு ஒரு ஊக்கம், உற்சாகம் வரவேண்டும். தவறு எதுவாக இருந்தாலும் அதை சுலபமாக திருத்தலாம் சரி செய்யலாம் என்பது போல் இருக்க வேண்டும் உங்கள் பேச்சு.

அடுத்தவர்களை சந்தோஷப்படுத்துங்கள். உங்கள் யோசனையைக் கேட்டு நடப்பதனால் அந்த சந்தோஷம் அவர்களுக்கு கிடைக்கவேண்டும். இந்தத் தகுதிகள் உங்களிடமிருந்தால் நீங்கள் ஒரு சிறந்த தலைவர் ஆகலாம் என்று அந்தப் புத்தகத்தில் உள்ளது.

இந்தக் காலத்தில் தலைவர் ஆவதற்கு வேறு சில தகுதிகள் தேவைப்படுகிறது. ஒரு பிள்ளை தனது தந்தையிடம் போய் அப்பா- உங்களை மாதிரியே நானும் அரசியலில் சேரவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இன்றிலிருந்து எனக்கு அரசியல் பாடம் கற்றுக்கொடுங்கள் என்றான்.

அவரும் "சரி" என்று கூறிவிட்டு ஒரு பெரிய ஏணியை எடுத்துக்கொண்டுவந்தார். ஒரு சுவற்றில் சாத்தினார். இந்த ஏணியில் ஏறி உயரே போய் அங்கே பரண் மீதுள்ள புத்தகத்தை எடுத்துக்கொண்டுவா என்றார். மகளைப் பார்த்து "அப்பா...ஏணி மிகவும் உயரமாக உள்ளது. கவனமாக இதைப் பிடியுங்கள். நான் ஏறுகிறேன் என்றான் மகன். "பயப்படாதே... நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றார் அப்பா.

மகன் ஏணி மீது ஏறினான். உச்சிக்குப் போனதும் அப்பா கையை எடுத்துவிட்டார். ஏணிசரிய மகன் கீழே பொத் என்று விழுந்துவிட்டான். இடுப்பைப்பிடித்துக் கொண்டே எழுந்தான். 'என்னப்பா இது... இப்படி என்னை ஏற விட்டு கையை விட்டுவிட்டீர்களே" என்றுகத்தினான். அப்பா நிதானமாகச் சொன்னார்.

"அவசரப்படாதே... அரசியலில் இதுதான் முதல் பாடம். பெற்றதந்தையாக இருந்தாலும் அவனை நம்பாதே'' என்று உபதேசம் செய்ய ஆரம்பித்தார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காண முடியாது - மஹிந்த

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காண முடியாது என்று சுதந்திரக் கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இது தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு மஹிந்த ராஜபக்ஷ அளித்த நேர்காணலில் ,

வடக்கு-கிழக்குப் பிரச்சினையை மனிதாபி மான முறையில் அணுகி உரிய தீர்வை ஏற்படுத்த வேண்டும். யுத்தம் மூலம் தீர்வு காணமுடியாது. சிறுபான்மையினர் எம்மை ஆதரிக்கவில்லை என்பது உண்மையில்லை. எம்மை பல சிறுபான்மை இனக் கட்சிகள் ஆதரிக்கின்றன.

நாம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்பு மூன்றே மாதங்களில் தென்னிலங்கையில் ஒத்த கருத்து உருவாக்கப்படும் இனப்பிரச்சினைக்கான எமது அணுகுமுறை புதிய முறையில் இருக்கும்.

வெளி நாடுகளுக்கு அதிக அளவில் செல்வதனாலேயே ஒருவர் சர்வதேச விவகாரங்களில் அனுபவங்களைப் பெற்று விட முடியாது. அதற்கான தகுதியையும் அடைந்து விடமுடியாது.



அமைதி முயற்சிகளில் நாம் நோர்வேயை மட்டும் சார்ந்திருக்கக் கூடாது. நோர்வேயின் சேவையை ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில் நாம் இந்தியாவின் உதவியையும் பெற வேண்டும்.

எம் மீதான அம்பாந்தோட்டை ஆழிப்பேரலை நிவாரண நிதி மோசடி பொய்யான ஒன்று. தேர்தலில் போட்டியிடும் எம்மீது அவதூறு தூற்ற கூறப்பட்ட முறைப்பாடு இது. இதை நாம் சட்டப் பூர்வமாக எதிர்கொள்வோம் என்று குறிப்பிட்டுள்ளார். (ற)

# பட்ஜெட்டுக்கும் தேர்தலுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது

## -பி.வி.ஜெயசுந்தர

(கொழும்பு)

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்துக்கும், நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் கிடையாது என நிதியமைச்சின் செயலாளர் பி.வி.ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டம் குறித்து கடந்த சனிக்கிழமை இலங்கை வர்த் தக சம்மேளனம் ஏற்பாடு செய்தமாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இம்முறை சமர்ப்பிக்கப்பட்டவரவு-செலவுத்திட்டத்துக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்குமிடையில் எவ்வித தொடர்பும் இல்லை. அதைவிட அரசியலிலும் தொடர்பு இல்லை.

இந்த வரவு செலவுத்திட்டம் வறுமையை ஒழிப்பதற்காகவும் அபிவிருத்தியை இலக்காக கொண்டும் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ் வரவு செலவுத்திட்டத்தில் விவசாயத்துறைககு கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. என்றும் நிதியமைச்சின் செயலாளர் அங்கு மேலும் தெரிவித்தார். (ற-8)

# தேர்தலை பகிஷ்கரித்து பேரினவாதக் கட்சிகளுக்கு உரிய பாடம் புகட்டுவோம்!

## -புதிய ஜனநாயகக் கட்சி

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையின் இரண்டு பேரினவாத ஆளும் வர்க்கக்கட்சிகளுக்கும் அவற்றின் கொள்கை வகுப்பாளர்களுக்கும் தகுந்த பதிலடியையும் உரிய பாடத்தையும் வாக்குப் பலத்தின் மூலம் கொடுக்க வேண்டுமாயின் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை அனைத்து தமிழ் மக்களும் ஏகோபித்த நிலை நின்று நிராகரித்து பகிஷ்கரிக்கவேண்டும்.

வாக்குப்போடுவதற்குரிய அதே ஜனநாயக உரிமையை வாக்குகள் போடாது அதனை நிராகரித்து பகிஷ்கரிக்கவும் பயன்படுத்தமுடியும் என்பதை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஒரு எதிர்ப்பு நடவடிக்கையாக எடுத்துக்காட்டல் வேண்டும்.

இவ்வாறு 'ஜனாதிபதித் தேர்தலும் தமிழ் மக்களும்'என்னும் தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.க.செந்திவேல் கூறியுள்ளார்.

யாழ். திருநெல்வேலியில் கட்சியின் வடபிரதேச செயலாளர் கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் செந்திவேல் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த 27வருடங்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையே நீடித்து வருகின்றது. நான்கு தேர்தல்கள் இடம்பெற்று நான்கு ஜனாதிபதிகள் ஆட்சிக் கதிரையில் இருந்து அதிகாரம் செலுத்தி வந்துள்ளனர். மறைந்த ஜே.ஆரும் தற்போதைய சந்திரிகா அம்மையாரும் இரண்டு பிரதான கட்சிகளின் சார்பாக ஆகக் கூடிய பதவிக் காலத்தில் இருந்தும் வந்துள்ளனர்.

ஆனால்,இக்காலப் பகுதியில் வடக்கு கிழக்கிற்கும் தமிழ் மக்களுக்கும் எத்தகைய கொடுமைகள் இழைக்கப்பட்டன என்பதை இவ்வேளை நினைவுபடுத்திப் பார்க்கவேண்டியது அவசியமாகும். கடந்த காலத்தை சரியான அரசியல் பார்வையின் ஊடாக ஆராய்ந்து அனுபவங்களையும் பட்டறிவுகளையும் உரியவாறு தொகுத்து முன்னெடுக்காத எந்தவொரு தேசிய இனமும் மக்கள் சமூகமும் எதிர்கால விடுதலையைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதே வரலாறு மெய்ப்பித்து வரும் உண்மையாகும்.

எனவே கொடிய பேரினவாத யுத்தத்தால் வடக்கு கிழக்கு அழிக்கப்பட்டு தமிழ் முஸ்லிம் மக்கள் எடுத்துரைக்க முடியாத துன்பதுயரங்களுக்குள் தள்ளப்பட்டனர். மக்களின் வாழ்வாதாரங்கள் அனைத்தும் நாசமாக்கப்பட்டதுடன் ஒரு இலட்சம் வரையான உயிர்கள் பறிக்கப்பட்டன. மக்கள் இடம்பெயர்ந்து இன்றும் ஏதிலிகளாக எதிர்காலம் மறுக்கப்பட்டவர்களாக வாழ்ந்தும் வருகின்றனர்.

இத் தகைய அவலநிலைக்கு உள்ளாக்கிய இரண்டு பிரதான ஆளும் வர்க்க பேரினவாதக் கட்சிகளே இன்று ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகள் கேட்டு நிற்கின்றன. யுத்தத்தை நடாத்தி அதன் மறைவில் தாராளமயம் தனியார் மயத்தின் மூலம் நாட்டு வளங்களையும் மனித உழைப்பையும் விலை பேசிவிற்று வந்த இரண்டு கட்சிகளுமே உழைக்கும் மக்களின் விரோதிகளாகவும் உள்ளன.

மலையக மக்களின் அடிப்படை வாழ்வுரிமைகளை மறுத்து வந்த இப் பேரினவாதக் கட்சிகளுக்காக வாக்குக் கேட்டு மலையகக் கட்சிகள் உதைத்த கால்களை முத்தமிடும் அடிமைத்தனத்தை தமது சுயநல அரசியலுக்காகச் செய்கின்றன.

இந் நிலையில் வடக்கு கிழக்கு மக்கள் தமது பேரினவாத ஒடுக்கு முறைக்கு எதிரான எதிர்ப்பு, சுய கௌரவம், தன்மானம் என்பவற்றை ஏகோபித்த நிலை நின்று எடுத்துக்காட்டுவதற்கு எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தல் உரிய ஒரு சந்தர்ப்பமாகும். ஆதலால் எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலை மக்கள் நிராகரித்து பகிஷ்கரித்து பேரினவாதக் கட்சிகளுக்கு உரிய பாடத்தைப் புகட்ட வேண்டும் என்றார். (ற)

# மஹிந்த மீது விசாரணை நடத்தப்பட வேண்டும்

## -பாலித அத்துக்கோரளை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்காக அரசாங்கத்தின் நிதியை முறைகேடாகப் பயன்படுத்தும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீது இலஞ்ச ஆணைக்குழு விசாரணை நடத்த வேண்டும் என்று ஜாதிக சேவக சங்கமய ஒருங்கிணைப்பாளர் பாலித அத்துக்கோரளை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பாலித அத்துக்கோரளை குறிப்பிடுகையில், கடந்த நவம்பர் 7 ஆம் திகதி ஆங்கில ஊடகம் ஒன்றின் இணைப்பாக 5 பக்க விளம்பரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கக் கோரும் அந்த ஐந்து பக்க விளம்பரமானது பல்வேறு அரச நிறுவனங்களின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விளம்பரம் எதுவித வர்த்தக நோக்கத்துக்காகவோ,எந்தப் பொருளின் அறிமுகத்துக்காகவோ வெளியிடப்படவில்லை. மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதற்காக மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன.

தேசிய லொத்தர் சபை, ஸ்ரீலங்கா ஏற்றுமதி நிறுவனம், நகரமைப்பு சபை, மகா நுகும சாலை கட்டமைப்பு நிறுவனம் (தனியார்), ஸ்ரீலங்கா கப்பல்கழகம் உள்ளிட்டவை இந்த விளம்பரங்களை வெளியிட்டுள்ளன.

மஹிந்த ராஜபக்ஷவை முன்னிலைப்படுத்த நேரடியாக அரசாங்கத்தின் நிதி செலவிடப்பட்டுள்ளது. தெளிவாக வெளிப்பட்டுள்ளது. இது இலஞ்ச ஆணைக்குழு சட்டங்களின் கீழ் விசாரணைக் குரியது. தேர்தல் சட்டங்களின் கீழும் இது குற்றமாகும். எனவே மஹிந்த ராஜபக்ஷ மீது இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணை நடத்தவேண்டும் என்றார். (ற)

# எந்த வேட்பாளரையும் புலிகள் ஆதரிக்காதது எதிர்பாராத ஒன்று

## -ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மஹிந்த ராஜபக்ஷ தமது கூட்டணிக் கட்சி களை ஒரே மேடையில் ஏற்ற முடியாத நிலை யில் நாட்டின் ஒன்றுமை குறித்துப் பேசி மக் களை ஏமாற்றுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க கூறியுள்ளார்.

இது தொடர்பில் ரவி கருணாநாயக்கா மேலும் கூறுகையில்,

மஹிந்தவின் கூட்டணியில் இணைந் துள்ள ஜே.வி.பி.யையும் ஜாதிக ஹெல உறு மயவையும் தமது தேர்தல் மேடையில் கூட ஒன்றிணைக்க முடியாதவர் மஹிந்த. நிறை வேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிப் பதவியை ஒழிக்க வேண்டும் என்கிறது ஜே.வி.பி. ஆனால் நிறைவேற்று அதிகார முள்ள ஜனாதிபதி நடிக்க வேண்டும் என்கி றது ஜாதிக ஹெல உறுமய. மஹிந்த ராஜ பக்ஷ என்ன நிலைப்பாடு மேற்கொள்ளப் போகிறார்?

எந்த வேட்பாளரையும் தமிழீழ விடு தலைப்புலிகள் ஆதரிக்காமல் இருப்பது எதிர்பாராத ஒன்று. விடுதலைப் புலிகளின முடிவால் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பாதிப்பு ஏற்படாது. அவர் தமிழர்களின் பிரதி நிதி மட்டுமல்ல. அனைத்து சிறுபான்மை இனமக்களினதும் பிரதிநிதி.

அனைத்து இலங்கையரதும் ஆதர வுடனேயே ரணில் ஜனாதிபதியாகத் தேர்ந் தெடுக்கப்படுவார். நாம் அதையே விரும்பு கிறோம். ஒரு இனத்தவரது பிரதிநிதியாக இருக்க நாம் விரும்பவில்லை. சிங்களத் தீவிரவாதிகளின் பிடியில் மஹிந்த ராஜபக்ஷ உள்ளார். எமக்கு சிறுபான்மை மக்களின் வாக்குகள் மட்டுமல்ல பெரும்பான்மை சிங்களவரின் வாக்குகளும் கிடைக்கும். தமிழ் மக்களும் எங்களுக்குத்தான் வாக்களிப்பா கள் என்றார். (ற)

## நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் எம்.கே.சிவாஜிலிங்கம் தமது பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து பளை மத்திய கல்லூரியின் தகவல் தொழில் நுடபத்திற் கென 5 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள் ளார். (த)

## கார்த்திகை பூரணை தினவிழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீராம கிருஷ்ண சேவாச்சிரமத்தில் கார்த்திகை பூரணை தினவிழா இன்று முற பகல் 9.00 மணிக்கு தாவடி இ.த.க.பாட சாலைப் பழைய கட்டடத்தில் இயங்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமத்தில் நடை பெறவுள்ளது. (த-7)

# நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி இன்று பிரியாவிடை உரை

(கொழும்பு)

ஜனாதிபதி பதவியில் இருந்து விடை பெறுவதற்கு முன்னர் நாட்டு மக்களுக்கான தனது இறுதி உரையை இன்று செவ்வாய் கிழமை அலுவல்ரீதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முக்கியமானதும் சர்ச்சைக் குரியதுமான கருத்துக்களை இதன்போது வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின் றது.

தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பா ளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிப தித் தேர்தலுக்காக சிங்கள அடிப்படை வாதிகளின் கருத்துக்களை ஏற்று கூட்டுச் சேர்ந்ததற்காக முன்னரும் கடும் விசனங் களை வெளியிட்ட சந்திரிகா, இன்றைய தனது இறுதி உரையின்போது இந்த விட யம் தொடர்பாக மேலும் விமர்சிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய பிரச்சினைக்குரிய கொள்கையில் மாற் றங்கள் எதுவும் இல்லை என்று தனது உரை யில் கூறவுள்ள ஜனாதிபதி, அடிப்படை வாத இனவாத சக்திகளை புறக்கணிக்கு மாறு கட்சி உறுப்பினர்களை கோருவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியின் இந்த உரைக்கு முன்னர், அவரைச் சந்தித்து பேச பிரதமர் கோரியிருந்த போதிலும், அதனை அவர் இழுத்தடித்து வருகின்றார் என மஹிந் தவுக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள ளனர்.

சந்திரிகாவின் மௌனத்தால் மஹிந்த மேலும் குழப்பமடைந்துள்ளதாகவும் அவர் கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பரப் புரைகள் முடிவு பெற்றாலும் ஸ்ரீலங்காவின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி என்ற வகையில் அவர் தேர்தல் பற்றிப் பேசு வதை தடுக்கமுடியாது என்றும் தெரிவிக் கப்படுகிறது. (ற)

# அச்சத்தினாலேயே மஹிந்த விவாதத்தைத் தவிர்த்தார்

## -ரணில்



(கொழும்பு)

தன்னால் முன்வைக் கப்படும் கேள்விகளு க்கு பதிலளிக்க முடி யாத நிலையில் பிரத மர் மஹிந்த ராஜபக்ஷ தன்னுடனான பகிரங்க விவாதத்தில் பங்கேற் பதை தவிர்த்துக் கொண டதாக ஐக்கிய தேசி யக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் மக்களின் பிரச்சினைகளுக்கு பதில் வழங்க முடியாத அச்சத்திலேயே இதில் கலந்து கொள்வதை தவிர்த்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல மாதங்களாக இந்த விவாதம் குறித்து பிரதமருக்கு அழைப்பு விடுத்திருந்த போதும் அவர் சில யோசனைகளைக் கூறியதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இவ்வாறான விவாதங்கள் அமெரிக்கா போன்ற நாடுகளில் நடத்தப்படுவதுண்டு. அவ்வாறான சந்தர்ப்பமொன்று இலங்கை வாழ் மக்களுக்குக் கிடைக்குமென்று எதி பார்க்கப்பட்டது.

இதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷவின் கொள்கைகள் நடைமுறைக்குச் சாத்தியமற்றவை.

'மஹிந்தவின் சிந்தனை' என்ற அவரது தேர்தல் விஞ்ஞாபன யோசனைகளை செயற படுத்த வரவு செலவுத் திட்டத்தில் நிதி யொதுக்கப்படாமை, சுனாமி நிவாரண நிதி தொடர்பான சர்ச்சை என்பன காரணமாக பிரதமர் விவாதத்தைத் தவிர்த்துக் கொண் டதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ற-9)

# கொழும்பு - கட்டுநாயக்கவுக்கு இடையில் அதிவேக ரயில் பாதையை அமைக்கும் வேலைகள் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்புக்கும் கட்டுநாயக்க சர்வ தேச விமான நிலையத்திற்கும் இடையிலான அதிவேக ரயில் பாதையை அமைப்பதற் கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான அடிக்கல்லை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று நாட்டி வைக கவுள்ளார்.

கொழும்பு நீர்கொழும்பு அதிகவேக நெடுஞ்சாலையில் ஏற்படும் சன நெருக் கடியைத் தீர்ப்பதற்கு இந்தத் திட்டம் வகை செய்யும்.

விமான நிலையத்தில் பயணிகள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்கும் இது உதவியாய் அமை யும்.

ஆடம்பரப் பெட்டிகளைப் பொருத்திய நவீன ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளன. இந்தத் திட்டத்தின் இரண் டாம் கட்டத்தின் கீழ் அதி வேக ரயில் பாதை வேலைகள் இரத்மலானை வரை வஸ்தரிக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள் ளார். (ற-7)

# விமான நிலைய வல்லுறவு சம்பவம்; குற்றவாளியின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இளம்பெண்ணை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கிய குற்ற வாளியின் விளக்கமறியல் எதிர்வரும் 21ஆம திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு நீதிமன்ற நீதிபதியும், மேலதிக நீதிபதியுமான காந்தி வணிகசேகர விடம் பொலிஸார் தாக்கல் செய்த விசாரணை அறிக்கையின் அடிப்படையில இக்குற்ற வாளியின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலை யத்தில் குவைத் செல்ல இருந்த இளம் பெண் பயணி, பாலியல் வல்லுறவுக்குள்ளாக கப்பட்டார். இது தொடர்பாக வெள்ளாவ பொலிஸ் நிலையத்தில் அந்த இளம் பெண முறைப்பாடு செய்தார். இதையடுத்து விமான நிலையப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர் உட்பட 5 பேர் கைது செய்யப்பட் டனர்.

இவர்களில் 4 பேர் ஏற்கனவே பிணை யில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ற)

## தொழிற் பயிற்சி நெறிகள்

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் மூலம் யாழ்.மாவட் டத்தில் முதன்முறையாக மூன்று இடங் களில் தொழிற் பயிற்சி நெறிகள் ஆரம் பிக்கப்படவுள்ளன.

பங்காளித்துவ நிறுவனங்கள் மூலம் அமுல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் கீழ் தென்மராட்சியில் வீட்டு மின் இணைப் புப் பயிற்சி நெறியும், வடமராட்சியில் தச்சுத் தொழிற பயிற்சி நெறியும், வலிகாமத்தில் மோட்டார் சயிக்கிள் பழுது பார்த்தல் பயிற்சி நெறியும் ஆரம்பிக்கப்படவுள்ள என கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனத் தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வகையில் மேற்படி நிறுவனத் தின் பங்காளித்துவ நிறுவனங்கான அற வழிப் போராட்டக்குழு, ஊற்று மற்றும் சர்வோதயம் ஆகிய அமைப்புக்கள் இவ் வருடம் மேற்குறிப்பிட்ட பயிற்சிகளை ஆரம் பிக்கும் என அறியப்படுகின்றது. (த-16)

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளி வாரிப்பரீட்சைகள் அலகின் 2002ஆம் ஆண் டிற்கான கலைமாணி பகுதி II பரீட் சைகள் இம்மாதம் 28ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ளன.

இப் பரீட்சைக்கான அனுமதி அட் டைகள், நேர அட்டவணைகளை இம் மாதம் 23ஆம் திகதியில் இருந்து யாழ்.பல் கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சை அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

இப் பரீட்சைக்கு 500ற்கு மேற்பட்ட மாணவர்கள் தோற்றவுள்ளனர். (ற-19)

# ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு அம்பாறை தமிழ் மாணவர் பேரவை அழைப்பு

(அம்பாறை)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பு தொடர்பாக அம்பாறை மாவட்ட தமிழ் மக களுக்கோர் பணிவான வேண்டுகோள் எனும் தலைப்பில் அம்பாறை மாவட்ட தமிழ் மாணவர் பேரவை துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அததுண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப பட்டுள்ளதாவது,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாம யாருக்கு வாக்களிப்பது? எனும் மயக்க நிலையில் நீங்கள் இருப்பீர்கள். மயக்கம் வேண்டாம். உறுதியோடும தெளி வோடும் இருங்கள். இதுவே நமது வெற்றி. கடநத காலங்ளைப் பாருங்கள். தேர்தல்க ளில் வாக்குறுதிகளும், ஒப்பந்தங்களும் சிங்களப் பேரினவாதிகளால் அள்ளி வீசப்பட்டு இறுதியில் ஏமாற்றப்பட்டு ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன.

டட்லி-செல்வா ஒப்பந்தம், பண்டா- செல்வா ஒப்பந்தம், சிறிமா-சாஸ்திரி ஒப்பந தம், ஜே.ஆர் -ராஜிவ் ஒப்பந்தம் என நீண்ட பட்டியல்களே இருக்கின்றன. ஆனாலும் எம் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

பண்டா குடும்பம் ஆட்சிக்கு வந்தாலும வேறு யாரும் ஆட்சிக்கு வந்தாலும் எமக்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை. இயற்கை யின் சீற்றமான கடற்கோள் அழிவுக்குரிய அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற் குரிய சாதாரண பொதுக் கட்டமைப்பையே விரும்பாத ஜே.வி.பி கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்துளள மஹிந்த வந்தாலும் சரி, ரணில் வந்தாலும சரி எல்லோரும் நச்சுப பாம் புகளே.

சிங்கள மக்கள் வாக்களிக்க அந் தந்த இடங்களிலேயே வசதிகளும் வாய்ப் புக்களும் ஏற்படுத்தப்படடுள்ளன. ஆனால் தமிழ் எம் தேசத்தில் ஊர்தியேறி துன்ப ப்பட்டு சோதனைச் சாவடிகளில் சோத னையிடப்பட்டு அடையாள அட்டையும் காட்டி இவ் வாறு சென்று நாடாளுமன்றத்திற் கும் இதன் அரசு தலைவர்களிற்கும் வாக் ளிக்க வேண்டுமா? சிங்களப் படையினர் சந்தேகப்பட்டால் எம்மைத் தடுத்து வைப்ப தற்கும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

எமக்கு வாக்களிக்க வேண்டிய அவசி யமும இல்லை. நியதியும் இல்லை. எனவே இந்த ஜனாதிபதித் தேர்தலை முற்றா கப் புறக்கணிப்போம் இதை சர்வதேச சமூ கம் புரிந்து கொள்ளட்டும். எமக்குத் தேவை யற்ற இந்தத் தேர்தலுக்கு வாக்களிக்கச் சென்று எமது நேரத்தை வீணடிக்காமல் எமக்கே உரித்தான இன உணர்வோடு எமது விடுதலைக்கு உரமூட்டி வாழ்வோம என அத்துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ற)

# ஜனாதிபதி சந்திரிகாவின் இறுதி அமைச்சரவைக் கூட்டம் இன்று!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் இடம்பெறவுள்ள இறுதி அமைச் சரவைக் கூட்டம இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் அமைச்சரவை உறுப்பினர்கள் ஜனாதிபதி சந்திரிகாவுக்குத் தமது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து அமைச்சரவைக்கு பிரியா விடை யினை வழங்குவர்.

அதன் பின்னர் ஜனாதிபதி என்ற வகையில் இறுதியாக அவருடன் ஒளிப் படங் களையும் எடுத்துக் கொள்ளவுள்ளனர். இதற்கான அழைப்புக் கடிதங்கள் அனைத்து அமைச்சர்களுக்கும் ஜனாதிபதி செயலகத்தினால் அனுப்பப்பட்டுள்ளன. (ற)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2005

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2005

**கர்நாடக சங்கீதம்** **நேரம் : 3 மணித்தியாலம்**

ஆசிரியர்: கே. எஸ். சிவஞானராஜா
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

## பகுதி - I

**பின்வரும் வினாக்களுக்குரிய பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்து புள்ளடித்தாளில் புள்ளடியிடுக.**

01.எடுத்துக்கொள்ளப்பட்ட இராகத்தின் இலட்சணத்தை விபரித்துக் கூறும் உருப்படி
(i)சஞ்சாரி கீதம் (ii) சாமானிய கீதம்
(iii)சாதாரண கீதம் (iv) இலட்சண கீதம்

02.'உன்னை யல்லால்' எனும் மத்திமகால உருப்படி அமைந்த இராகம்:
(i)மோகனம் (ii)காம்போதி
(iii)கல்யாணி (iv)சிம்மேந்திரமத்திமம்

03.'காலனிடத் தணுகாதே' என்னும் திருப்புகழ் அமைந்த தாளம்:
(i)மிஸ்ர சாபு (ii)திஸ்ர சாபு (iii)கண்ட சாபு (iv)சங்கீரணசாபு

04.பண் பியந்தைக் காந்தாரம் எனப்படும் இராகம்:
(i)பந்துவராளி (ii)காம்போதி (iii)நவரோஜ் (iv)மத்தியமாவதி

05.'கலைகள் மிகுந்த எங்கள் தமிழ் வாழ்கவே' என்னும் உருப்படி:
(i)தில்லானா (ii)இராகமாலிகை
(iii)பதம் (iv)பதவர்ணம்

06.ஸமகரி ஸரிகம பாதாபா என்பதில் உள்ள நெடில் ஸ்வரங்கள்
(i)06 (ii)03 (iii)14 (iv)8

07.கமகத்தினைக் காட்டும் குறியீடு
(i) ∼∼∼ (ii) ✳ (iii) ‖ (iv) O

08.ஆவர்த்தன முடிவைக் காட்டும் குறியீடு
(i) ∼∼∼ (ii) ✳ (iii) ‖ (iv) O

09.'மயில் வாகனா' என்னும் உருப்படி அமைந்த இராகம்
(i)மோகனம் (ii)தோடி
(iii)கல்யாணி (iv)காபி

10.கோடீஸ்வர ஐயர் இயற்றிய உருப்படிகளுள் ஒன்று
(i)உன்னையல்லால் (ii)மயில்வாகனா
(iii)கலைகள் மிகுந்த (iv)எந்தையீசன்

11.சிம்மேந்திரமத்திம இராகத்தின் மேள எண்
(i)51 (ii)56 (iii)57 (iv)58

12.வீணை ,வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், கடம் , தபேலா ஆகிய கருவிகளில் தோற்கருவிகளின் எண்ணிக்கை
(i)01 (ii)02 (iii)03 (iv)04

13.'தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனைகள்' அமைந்த சுவை?
(i)திராட்சைரசம் (ii)கதலிரசம்
(iii)நெல்லிரசம் (iv)நாளிகேரரசம்

14.குற்றாலக் குறவஞ்சி என்ற இசை நாடகத்தை எழுதியவர்
(i)திரிகூட இராசப்பக் கவிராயர் (ii)பாரதியார்
(iii)அருணாசலக்கவிராயர் (iv)முத்துத்தாண்டவர்

15.'தான வர்ண மார்க்கத் தீர்க்க தரிசி' என அழைக்கப்படுபவர்
(i)பச்சிமிரியம் ஆதியப்பய்யர் (ii)பாலமுரளிகிருஷ்ணா
(iii)கோபாலகிருஷ்ண பாரதியார் (iv)பாபநாசம் சிவன்

16.பைடால குருமூர்த்தி சாஸ்திரிகளின் சிறப்புப் பெயராக அமைவது:
(i)வெயிகீத (ii)பத்மஸ்ரீ (iii)மூதறிஞர் (iv)கலாபூஷணம்

17.விலோம சாபு தாளத்தில் கிருதிகளை இயற்றிய மகான்
(i)சியாமா சாஸ்திரிகள் (ii)முத்துச்சாமி தீட்சதர்
(iii)தியாகராஜ சுவாமிகள் (iv)ஸ்வாதித் திருநாள் மகாராஜா

18.பஞ்சரத்தினக் கீர்த்தனையை அருளியவர்
(i)சியாமா சாஸ்திரிகள் (ii)முத்துச்சாமி தீட்சதர்
(iii)தியாகராஜா சுவாமிகள் (iv)பாபநாசம் சிவன்

19.மிஸ்ரசாபுக்குரிய தாளச் சொற்கட்டு
(i)தக தகிட (ii)தகிட தகதிமி
(iii)தக திமி த்கிட (iv)தக திமி தக தகிட

20.'சங்கீத சாராம்ருதம்' எனும் நூலை எழுதியவர்
(i)துளஜா மகாராஜா (ii)ஸ்வாதித்திருநாள் மகாராஜா
(iii)வெங்கடமகி (iv)கோவிந்தாச்சாரியார்

21.பதநிஸ்ரிக்ம் எனும் ஸ்வரத் தொடரில் தாரஸ்தாயி ஸ்வரங்கள்
(i)3 (ii)4 (iii)7 (iv)2

22.லகு , அனுத்துருதம், துருதம் ஆகிய அங்கங்களை உடைய தாளம்:
(i)துருவதாளம் (ii)ஜம்பை தாளம்
(iii)மட்டியதாளம் (iv)ரூபக தாளம்

23.'குஞ்சரதாசன்' எனும் முத்திரையையுடைய வாக்கேயகாரர்
(i)கோடீஸ்வர ஐயர் (ii)பாபநாசம் சிவன்
(iii)கவிகுஞ்சர பாரதி (iv)பாரதி தாஸன்

24.'சங்கீத பிதாமகர்' எனப் போற்றப்படுபவர்
(i)இளையராஜா (ii)ரகுமான்
(iii)புரந்தரதாசர் (iv)வெங்கடமகி

25.சதுர்த்தண்டிப் பிரகாசிகை எனும் நூலை இயற்றியவர்
(i)வெங்கடமகி (ii)கோவிந்தாச்சாரியார்
(iii)ஜெய தேவர் (iv)சேத்ரக்ஞர்

26.பாண சக்கரத்தில் நான்காவது இராகம்
(i)சங்கராபரணம் (ii)அரிகாம்போதி
(iii)தோடி (iv)நடனபரவி

27.திருத்தாண்டகம் பாட உகந்த இராகம்
(i)சங்கராபரணம் (ii)மத்தியமாவதி
(iii)அரிகாம் போதி (iv)நவரோஜ்

28.ஸ்வரங்கள்,சாகித்தியம், ஜதிகள் நிறைந்த உருப்படி
(i)ஜாவளி (ii)தில்லானா (iii)பதம் (iv)கீதம்

29.தியாகராஜ சுவாமிகளின் காலம்
(i)1767 - 1826 (ii)1767 - 1836
(iii)1767 - 1846 (iv)1767 - 1847

30.பிடில் வாத்தியத்தினைக் கர்நாடக சங்கீதத்திற்கு அறிமுகப்படுத்தி வெற்றி கண்டவர்
(i)லால்குடி ஜெயராமன் (ii)தஞ்சை வடிவேலுப்பிள்ளை
(iii)பாலஸ்வாமி தீட்சதர் (iv)நாராயண ஸ்வாமி ஐயர்

31.தாளம் தொடங்கிய பின்னர் பாடல் ஆரம்பிக்குமாயின் அவ்வகை எடுப்பு:
(i)அதீத எடுப்பு (ii)சம எடுப்பு
(iii)அநாகத எடுப்பு (iv)விசம எடுப்பு

32.72 மேளகர்த்தாக்களில் உத்தராங்க மேளங்கள்
(i)01 - 36 (ii)36 - 72 (iii)01 - 06 (iv)37 - 72

33.சபாகானத்திலும் அப்பியாச கானத்திலும் அடங்கும் உருப்படி
(i)இராகமாலிகை (ii)தில்லானா
(iii)கீர்த்தனை (iv)வர்ணம்

34.பஜனைப் பத்ததியின் தந்தை எனப் போற்றப்படுபவர்
(i)தாளம் பாக்கம் சின்னையா (ii)புரந்தர தாசர்
(iii)ஷேசகோபாலன் (iv)பித்துக்குளி முருகதாஸ்

35.பதவர்ணம் அமைந்த காலப்பிரமாணம்
(i)மத்திம காலம் (ii)துரித காலம்
(iii)சௌக்க காலம் (iv)திவிதீய காலம்

36.ஔடவ ஔடவ இராகத்திற்கு உதாரணம்
(i)கம்சத்வனி (ii)மோகனம்
(iii)சுத்தசாவேரி (iv)மேற்கூறப்பட்ட யாவும் சரி

37.ஸ்வரங்கள் சிரமமின்றிச் செல்வது
(i)வக்கிரம் (i)வர்ஜம்
(iii)உபாங்கம் (iv)பாஷாங்கம்

38.மத்தியஸ்தாயி நிஷாதத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம்
(i)தைவதாந்திய இராகம் (ii)நிஷாதாந்திய இராகம்
(iii)பஞ்சமாதாந்திய இராகம் (iv)மத்திமாந்திய இராகம்

39.சுத்த மத்திம மேளகர்த்தாக்களின் தொகை
(i)16 (ii)50 (iii)36 (iv)72

40.நாட்டியக் கச்சேரிகளில் முதலிடம் வகிக்கும் தோற்கருவி
(i)தபேலா (ii)உடுக்கு (iii)கெஞ்சிரா (iv)மிருதங்கம்

(40X 1 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாவது வினாவுக்கும் ஏனைவற்றுள் விரும்பிய மூன்று வினாக்களுக்கும் மொத்தமாக 4 வினாக்களுக்கு விடையளிக்குக.**

**01.சிறுகுறிப்பு எழுதுக:**
(அ) ஸ்தாயி (ஆ) கதாகாலஷேபம்
(இ)இசை நாடகம் (ஈ) பண்
(உ) பல்லியம்

**02.பின்வரும் உருப்படி வகைகளில் இரண்டிற்கு விரிவான இலட்சணம் எழுதுக?**
(1) பதம் (2)சௌக்ககாலக் கீர்த்தனை
(3)வர்ணம் (4)கீதம்
(5)தில்லானா

**03.பின்வரும் இராகங்களில் இரண்டிற்கு விரிவான இலட்சணம் எழுதுக?**
(1) புராணம் பாடப்படும் இராகம் (2)பண் – சாதாரி எனப்படும் இராகம்
(3)வெண்பா பாடப்படும் இராகம் (4) 'திசி – கோ' எனப்படும் இராகம்

**04.நீர் கற்றுக்கொண்ட ஆதி தாள வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை ஸ்வர ஸாகித்திய அங்க அடையாளங்களுடன் எழுதுக.**

**அல்லது**

**நீர் கற்ற சஞ்சாரி கீதத்தினை ஸ்வர ஸாகித்திய அங்க அடையாளங்களுடன் எழுதுக.**

(07ஆம் பக்கம் பார்க்க...)

# தீவக வலய ஆக்கப் பொருள் கண்காட்சி முடிவுகள்

(புங்குடுதீவு)

தீவக வலயமட்ட ஆக்கப் பொருள் கண் காட்சி முடிவுகள் வெளியாகியுள்ளன.

**முதன்மை நிலை I (சித்திரம்)**

1ஆம் இடம் - ச.கிரிந்தரன், கரம்பொன் சண்முகநாதன் வித்தி, 2ஆம் இடம் - எஸ். அட்சகன், நாரந்தனை கணேசா வித்தி, 3ஆம் இடம் - யோ.தினேஸ், காரை யாழ்ற்ரன் கலலூரி.

**முதன்மை நிலை I (ஆக்கம்)**

1ஆம இடம் - க.கௌசிகா, புனித மரி யாள் மகளிர் றோ.க.வித்தி, 2ஆம் இடம் - எஸ். கோகுலன், புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தி, 3ஆம் இடம் - எஸ்.சுயானா, தம் பாட்டி அ.த. க.பாட.

**முதன்மை நிலை II (சித்திரம்)**

1ஆம் இடம் - சு.சுயந்தன், நாரந்தனை றோ. க. வித்தி, 2ஆம் இடம் - எஸ்.சிவ காந்தன், காரை.சுந்தரமூர்த்தி வித்தி, 3ஆம் இடம் - எஸ்.விதுசன்னா சரவணை சின்னமடு றோ.க. வித்தி.

**முதன்மை நிலை II (ஆக்கம்)**

1ஆம் இடம் - சர்மிளா, வலந்தலை வடக்கு வித்தி, காரைநகர், 2ஆம் இடம் - றொபேக்கா, புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தி, 3ஆம் இடம் - மேகலா, பாலவோடை இந்து தமிழ் கலவன் வித்தி.

**முதன்மை நிலை III (சித்திரம்)**

1ஆம் இடம் - பிரணவி, மண்கும்பான் அ.த. க.வித்தி, 2ஆம் இடம் - திவ்விகா, சர வணை நாகேஸ்வரி மகா வித்தி, 3ஆம இடம் - துஜிபா, நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி வித்தியாலயம்.

**முதன்மை நிலை: ஆக்கம்**

1ஆம் இடம் - தே.ஐங்கரன், வேலணை கிழக்கு மகா வித்தி, 2ஆம் இடம் - அ.நிரோ ஜன், நாரந்தனை றோ.க.வித்தி, 3ஆம் இடம் - சி.சுகனியா, புங்குடுதீவு கமலாம் பிகை வித்தி.

**கனிஷ்ட பிரிவு - சித்திரம்**

1ஆம் இடம் - இ.சத்தியரூபன், வேலணை துரை மத்தி மகா வித்தி, 2ஆம் இடம் - நிசாந் தன், புனித அந்தோனியார் கல்லூரி, 3ஆம் இடம் - ஜெ.விதுர்சா, கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தி.

**கனிஷ்ட பிரிவு ஆக்கம்**

1ஆம் இடம் - அ.நிருஜிகா, நெடுந்தீவு றோ.க.வித்தி, 2ஆம் இடம் - பிரணவன், வேலணை சேர்.துரைமத் மகா வித்தி, 3ஆம இடம் - பொ.துவாரகன், நெடுந்தீவு சீக கிரியாம் பள்ளம் அ.த.க.வித்தி.

**சிரேஷ்ட பிரிவு சித்திரம்**

1ஆம் இடம் - க.மரியதர்சினி, கரம் பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தி, 2ஆம் இடம் - த.றஜீவன், வேலணை மேற்கு நட ராஜா வித்தி, 3ஆம் இடம் - பா.ரூபன், நாரந் தனை றோ.க.வித்தி.

**சிரேஷ்ட பிரிவு ஆக்கம்**

1ஆம் இடம் - அஞ்சலீன் சுஜீவா, புனித மரியாள் மகளிர் றோ.க.வித்தி, 2ஆம் இடம் - ம.மயூரி, கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தி, 3ஆம் இடம் - சூ.தீபா, நெடுந் தீவு மகா வித்தி.

**சிரேஸ்ட இடைநிலை - சித்திரம்**

1ஆம் இடம் - என்.ஜெயதாஸ், சேர்.வைத் துரை ம.மகா வித்தி, 2ஆம் இடம் - த.மயூ ரன், சேர்.வைத்துரை ம.மகா வித்தி, 3ஆம் இடம் - ஜனார்த்தனன், நயினாதீவு மகா வித்தி.

**சிரேஸ்ட இடைநிலை ஆக்கம்**

1ஆம் இடம் - யோ.மொறின், எஸ்ரன் புங குடுதீவு மகா வித்தி, 2ஆம் இடம் - வா.திருயம்பிகை, நயினாதீவு மகா வித்தி, 3ஆம் இடம் - ம.நிசாந்தன், புங்குடுதீவு மகா வித்தி. (த-126)

## நெற் செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாக இப் பகுதியில் பல நெற் செய்கையாளர்க ளின் நெற் பயிர்கள் வெள்ளம் காரண மாக அழிந்து போயுள்ளன.

இதனால் நெற்செய்கையாளர்களுக் குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

நெற் பயிர்கள் இருந்த வயல்கள் யாவும் வெள்ளத்தில் மூழ்கிப் போயுள் ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேசமயம் தென்மராட்சி பிரதேசத் தில் பல விவசாயிகள் அதிகரித்த மூலத் தனச் செலவு காரணமாக நெற்செய்கை யில் ஈடுபடவில்லை என்றும் தெரிய வரு கின்றது. அத்தகைய வயல்கள் யாவும் வெறுமையாகவே இருக்கின்றன. (த-16)

# வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு எல்லோரது ஒத்துழைப்பும் அவசியம்

(மருதங்கேணி)

யாழ்.மாவட்டத்திலுள்ள ஆலயங்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றன. அதே போல எதிர்காலத்தில் பாடசாலைகளும், வைத் தியசாலைகளும் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும். இன்றைய நிலையில் கல்வி யும் ஆரோக்கியமும்தான் சமூகத்திற்கு அவசியமாகும்.

இவ்வாறு கரவெட்டி அரசினர் வைத் தியசாலை அபிவிருத்தி சபையால் நடாத் தப்பட்ட கொடிவாரத்தை முன்னிட்டு நடாத் தப்பட்ட விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.பிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவ்விழா அபிவிருத்தி சபை தலைவர் சி.வி.பொன்னம்பலம் தலைமையில் நடை பெற்றது.

ஆ.கேதீஸ்வரன் தொடந்து கூறிய தாவது.

1970ஆம் ஆண்டு அளவில் யாழ்.மாவட் டத்தில் கல்வி, சுகாதாரம் என்பன கொடிகட் டிப் பறந்தன. இக் காலத்திற்குப் பின்னர் வைத்திய சேவைகள் பின்தங்கிய நிலைக் குத் தள்ளப்பட்டது. கல்வி, சுகாதாரம் ஆகி யதுறையில் முன்னர் இருந்த நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டால் தான் எதிர்கால சந்ததியினருக்கு பலன் கிடைக்கும். வைத் தியசாலையில் ஊர்மக்கள் அக்கறை கொள்ள வேண்டும், அபிவிருத்தியில் பொது மக்களின் விழிப்பும் பங்களிப்பும் இருக்க வேண்டும்.

பெரியதனவந்தனர்களிடமிருந்தும் நிறு வனங்களிடமிருந்தும் நிதி உதவிகளைப் பெற்று வைத்தியசாலையைக் கட்டி எழுப்ப வேண்டும். ஒவ்வொரு பொது மகனும் எந்த விதத்திலும் பங்களிப்புச் செய்தால் வைத் தியசாலையின் தேவையை, பெறுமதியை உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருக்கும் இந்த நோக்கத்தோடுதான் அபிவிருத்தி சபை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட மந் திகை அரசினர் வைத்தியசாலை திறம்பட செயற்பட்டு வருகிறது. அவ் அபிவிருத்தி சபை கொடிவாரத்தை ஆரம்பித்து பல இலட்சக் கணக்கான ரூபாவைப் பெற்றுள்ளது. இந்தப் பணம் ஏழை நோயாளர்களுக்கு தட்டுப்பா டின்றி மருந்து வகைகளை வாங்கிக் கொடுக் கவும் ஏனைய அத்தியாவசியத் தேவைகளுக் கும் பயன்படுத்தப்பட்டுவருகிறது.

யாழ்.மாவட்டத்தில் நிலவும் டாக்டர் பற் றாக்குறையைப் போக்க இளைப்பாறிய டாக்டர்களை மீண்டும் சேவைபுரிய வரு மாறு தான் யாழ்ப்பாணத்தில் பொறுப்பேற் றதும் அழைப்பு விடுத்திருந்தேன். அதை ஏற்று சேவை புரிய சிலர் முன்வந்தார்கள் இளைப்பாறிய டாக்டர் யோகேஸ்வரதேவரும் சேவையாற்ற முன்வந்து கரவெட்டி அரசி னர் வைத்தியசாலையைப் பொறுப்பேற் றார். இதன் பிறகு இவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் அதி கரித்துள்ளனர்.

யாழ்.ம்மாவட்டத்தில் 38 வைத்தியசாலை கள் உள்ளன. அவையாவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்துவருகிறது. இவ் வைத் தியசாலைகளின் தேவைகள் பிரச்சினை களை இனங்கண்டு அவற்றைத் தீர்த்துக் கொள்ளத் திட்டங்கள் வகுத் துள்ளோம்.

எல்லா வைத்திய சாலைகளிலும் 24 மணிநேரமும் ஆஸ்துமா நோய்க்கு சிகிச்சை பெற்றுக்கொள்ளவும் ஏற்புத் தடை ஊசி மருந்துகளை போட்டுக் கொள்ளவும் வச திகள் செய்து கொடுக்கவுள்ளோம். ஏற்பூசி மருந்து வைத்திருப்பதற்கு குளிரூட்டிக ளும் வழங்கப்படும். யாழ்.மாவட்டத்தில் நீரி ழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதி கரித்துள்ளது. இந்நோய்களுக்கான சிகிச் சையின் ஓரங்கமாக இரத்த பரிசோதனை யும் அனைத்து வைத்தியசாலைகளிலும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும், பிரசவவிடுதிகள் உள்ள 25 வைத்தியசாலை களுக்கும் பிரசவ உபகரணங்கள் வழங் கியுள்ளோம்.

வைத்திய சேவையையும் நிர்வாகத் தினையும் முன்னெடுக்க வசதியாக அடுத்த வருடம் அனைத்து வைத்தியசாலைக்கும் தொலைபேசி இணைப்புக்கள் வழங்க நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின் றன. இக்கரவெட்டி வைத்தியசாலை 38 வருடங்களாக பழைய கட்டடத்திலேயே இய ங்கிவருகிறது. இதனை அபிவிருத்தி செய்ய இடவசதி போதாது தற்பொழுதுதான் கர வெட்டி தச்சன்தோப்பு விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் 12 பரப்பு காணியைத் தந்துள்ளனர். இவ் வைத்தியசாலையைப் பிரதேச வைத்தியசாலையாகத் தரம உயர் தத வேண்டும். பிரதேச வைத்தியசாலைக்கு வெளிநோயளர் பிரிவு, மகப்பேற்று விடுதி, ஆண், பெண் நோயாளர் விடுதி, வைத்திய அதி காரி விடுதி, மருத்துவதாதியர் விடுதி, அம் புலன்ஸ் வண்டி ஆகியன இருக்க வேண் டும். ஆகவே கிடைக்கப்பெற்ற காணியில் இவற்றையெல்லாம் கட்டி முடிக்க பொதுமக் கள் ஒத்துழைப்பு அவசியம் என்றார். (கு35)

## விளக்கீடு உற்சவம்

(யாழ்ப்பாணம்)

இந்தியா திருவண்ணாமலையில் திரு விளக்கு கொண்டாடப்படவுள்ள எதிர்வரும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதியே வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயத்திலும் விளக் கீடு உற்சவம் இடம்பெறவுள்ளது.

எனவே, இவ் ஆலயத்தைச் சேர்ந்த அடி யார்கள் அனைவரையும் அன்றைய தினமே தங்களது இல்லங்களில் விளக்கீட்டுத் திருநாளை கொண்டாடுமாறு கேட்கப்பட் டுள்ளது.

இதேவேளை ஜனவரி மாதம் 4ஆம் திகதி திருவெம்பாவை ஆரம்பமாகவுள் ளது. (ரு-9)

## பயிற்சிப் பாசறை

(கொழும்புத்துறை)

திருமறைக்கலாமன்ற இளைஞர் அவை யின் ஏற்பாட்டில் இன்று 9.30 மணி தொடக் கம் 5.00 மணிவரை பயிற்சிப் பாசறை யொன்று நடைபெறவுள்ளது.

"படைப்பாக்கமும் ஆளுமை விருத் தியும்" என்ற தலைப்பில் நடைபெறும் ஊட கம் சார் பயிற்சிப் பாசாறையானது துறை சார் வள ஆளுனர்களால் நடாத்தப்படவுள ளது. (த51)

# சர்வதேச எய்ட்ஸ் தினத்தையொட்டி மாணவர்களிடையே போட்டிகள்

எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே விழிப்புனர்வை ஏற்படுத்தும் நோக்கில் கட்டுரை ஓவியப போட்டிகள் நடாத்துவ தற்கு யாழ.மாவட்ட எய்ட்ஸ் தடுப்புக்குழு தீர்மானித்துள்ளது. இதற்கான அனுசர னையை யாழ் மாவட்ட யு.என்.எச்.சி ஆர் நிறுவனம் வழங்குகின்றது.

இது தொடர்பாக யாழ்மாவட்டத்தில் உள்ள வலயக் கல்விப் பணிப்பாளாகள், கோட்டக கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்களிற்கு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கடிதங்கள் அனுப்பி வைத்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

**கட்டுரைப்போட்டி:** இரண்டு பிரிவுகளாக நடாத்தப்படும். *பிரிவு I*- க.பொ.த (சாதார ண தர) மாணவருக்கானது. இதில் 'எயிட்ஸ் நோய்த் தடுப்பில் இளைஞரின் பங்கு' எனும் தலைப்பில் 300 சொற்களிற்கு குறையாது எழுதப்படவேண்டும்.

*பிரிவு II*- க.பொ.த(உயர்தர) மாணவர் களிற்கானது. இவர்கள் 'புதுயுகத்திற்கு எய்ட்ஸ் ஒரு சவால்' எனும் தலைப்பில் 400 சொற்களிற்கு குறையாது எழுத வேண்டும்.

**ஓவியப்போட்டி:**

க.பொ.தசாதாரணதரம், உயர்தர ஆகிய இரண்டு தரத்தினருக்கும் சேர்த்து ஒரு பிரிவாக நடாத்தப்படும். இதில் 'எயிட்ஸ் நோயைத் தடுப்போம்' எனும் தலைப்பைக் கொண்டு தமது கற்பனை ஓவியங்களை (ஏ-3) பேப்பரில் வரைந்து அனுப்பவேண்டும்.

மாணவர்கள் தமது சுய ஆக்கங்களை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னதாக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் சுகாதார சேவைகள் பணிமனை ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் எனும் முக வரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றிபெறும் முதல் மூவருக்கு பெறு மதியான பரிசில்களும் மற்றும் 10 பேரு க்கு ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்க ளும் வழங்கப்படவுள்ளதாகவும் இது விட யமாக பாடசாலை மாணவ்களிற்கு விளக்க மளித்து இப்போட்டிகளில் பங்கு பெறச் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-252)

## திருத்தம்

14.11.2005 திகதி வலம்புரியில் வெளி யான திருக்கார்த்திகை விளக்கீடு பற்றிய கட்டுரையிலும், அது தொடர்பான செய்தி யிலும் விளக்கீடு 15.11.2005 செவ்வாய்க் கிழமையெனத் தவறுதலாகக் குறிப்பிடப் பட்டுவிட்டது. விளக்கீட்டுத்தினம் 15.12. 2005 வியாழக்கிழமையேயாகும் எனத் திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

5. அ.நாதஸ்வரத்திற்கு தாளவாத்தியமாக அமையும் இசைக்கருவி யாது?
   ஆ. அவ்வாத்தியத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக?
   இ. அவ்வாத்தியத்தின் அமைப்பினையும் சுருதி சேர்க்கும் முறையினையும் அவ் வாத்தியத்தில் பிரபல்யமான வித்துவான்கள் இருவரையும் குறிப்பிடுக?

06. அ.குருகுக என்ற முத்திரையையுடைய வாக்கேயகாரர் யார்?
    ஆ. இவ்வக்கேயகாரர் வாழ்ந்த காலப்பகுதியைக் குறிப்பிடுக?
    இ. இவ்வாக்கேயகாரரின் இசைத்தொண்டினை விரிவாக எழுதுக?

07. அ.ஜனக இராகத்திற்கு இருக்க வேண்டிய இலட்சணங்கள் நான்கினையும் எழுதுக?
    ஆ.மேளகர்த்தா சக்கரங்கள் பன்னிரண்டையும் கிரமமாக எழுதுக?
    இ.முன்றாம் ஒன்பதம் சக்கரங்களின் மேள எண்கள், இராகங்கள் ஸ்வரஸ்தானங் களை உரியவாறு எழுதுக?

08. அ.இந்தியாவில் 17ஆம் 18ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாச்சாரப் பின்னணி பற்றி ஆராய்க

*அல்லது*

ஆ.நீர் இரசித்த ஒரு கர்நாடக இசைக் கச்சேரி பற்றி விமர்சனக் கட்டுரை எழுதுக?

(4 X 15 = 60 புள்ளிகள்)

க.பொ.த (சா/ த) மாணவர்களே!
உங்கள் வலம்புரியில் தொடர்ந்தும் பயிற்சி வினாத்தாள்கள் வெளிவரும்.

# மாரடைப்பு நோய்பற்றி தெளிவாகத் தெரிந்து கொண்டால் அநியாய மரணங்களை தவிர்க்கலாம்

**நமது நாட்டிலே மாரடைப்பு என்றும் உயிர்கொல்லி நோய்குத் தினசரி பலியரவோர் தொகை ஏராளம். நமது நாட்டில் மாத்திரமல்ல, உலக நாடுகள் அனைத்திலும் இந்நோயின் தாக்கத்தால் தினமும் ஏராளமானவர்கள் இறந்து கொண்டேயிருக்கிறார்கள். இதயத்தில் திடீரென ஏற்படும் வலி சாதாரண வலியாகவும் இருக்கலாம், மாரடைப்பு ஏற்படுவதற்கான முன்னறிகுறியாகவும் இருக்கலாம். மாரடைப்பு நோய் பற்றிய தெளிந்த அறிவின்மையே அநியாய மரணங்கள் ஏற்படுவதற்கும் காரணமாக அமைகின்றது.**

**மாரடைப்பு நோய் என்றால் என்ன? அதன் ஆரம்ப அறிகுறிகள் யாவை? அதற்கான சிகிச்சை முறைகள் எவை என்பன பற்றி ஒவ்வொரு வரும் அறந்திருக்க வேண்டியது அவசியம். அந்தவகையில் டாக்டர் சி.யமுனாநந்தாவின் கேள்வி-பதில் மூலமான விளக்கம் பயனுள்ளதாக அமைகிறது.**

***கேள்வி:- மாரடைப்பு நோய் எவ்வாறு ஏற்படுகின்றது?***

***பதில்:-*** இதயத்திற்கு குருதி வழங்கும் முடியுறாநாடிகள் அடைபடுவதால் இதயத்தசைகளிற்குச் செல்லும் குருதியின் அளவு குறைவடைந்து இதயத் தசைகள் அழிவடைவதால் ஏற்படும் நோய் நிலை.



***கேள்வி:- முடியுறா நாடிகள் அடைபடுவது எவ்வாறு?***

***பதில்:-*** முடியுறாநாடியில் கொலஸ்ரோல் அல்லது கொழுப்புப் படிவதால் அகவணி தடிப்படைந்து அங்கு குருதிகட்டி படுவதால் அடைப்பு ஏற்படும்.

***கேள்வி:- மாரடைப்பு யாருக்கு ஏற்படுகின்றது?***

***பதில்:-*** 70 வயதிற்கு மேல் சாதாரணமாக ஏற்படலாம். ஆனால் 40 வயதிற்கு மேல் உடல் பருமனானவர்கள், நீரிழிவு நோயாளிகள், புகைபிடிப்பவர்களிலும் அதிக கொலஸ்ரோல் உடையவர்கள், 30வயதிற்கு மேல் குருதி உறையும் தன்மை உடையவர்களிற்கு ஏற்படலாம்.

***கேள்வி:- நோயின் கடுமையும் இறப்பும் எதில் தங்கியுள்ளது.***

***பதில்:-*** இதயத்தசைகளுக்கு குருதிவழங்கல் நெடுநேரம் பாதிக்கப்படுமாயின் அவை மீளமுடியாத பாதிப்புக்கு உள்ளாகி அழிவடையும். எவ்வளவு இயத்தசை பாதிக்கப்பட்டு உள்ளதோ என்பதில் நோயின் தாக்கம் தங்கி உள்ளது. ஆரம்பத்திலேயே அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை அளிப்பதால் இலகுவில் குணமடையலாம்.

***கேள்வி:- மாரடைப்பிற்குரிய அறிகுறிகள் என்ன?***

***பதில்:-*** அசௌகரியமான நெஞ்சு அழுத்தம், நெஞ்சு நிறைந்த தன்மை, நெஞ்சின் நடுப்பகுதியில் நோ, இறுக்குதல், பிழிதல் போன்ற உணர்வுகள் 5-15 நிமிடங்கள் நீடிக்கும். நோ தோள் மூட்டிற்கு கைக்கு, பரவலாம். கழுத்திற் கும் முகத்திற்கும் பரவலாம். நெஞ்சு அசௌகரியமாக இருக்கும். தலைப்பாரமின்மை காணப்படும். மயக்கம் ஏற்படலாம் வியர்த்தல், வாந்திக்குணம், மூச்சுத்திணறல் என்பன காணப்படும்.

***கேள்வி:- ஏன் வைத்தியசாலைக்கு செல்லத் தாமதமாகின்றது?***

***பதில்:-*** எல்லா அறிகுறிகளும் ஒரே தடவையில் எல்லாருக்கும் வருவதில்லை. அநேகமானோர் ஆரம்பத்தில் நோ ஏற்படும் போது அது இதயத்தில் இருந்து ஏற்படுகின்றது என்று எண்ணுவதில்லை. இதனால் தாமதித்தே வைத்தியசாலையை நாடுவர்.

***கேள்வி:- மாரடைப்பு நோய் ஏற்பட்டுள்ளது என்பதை எவ்வாறு வைத்தியர் உறுதிப்படுத்துவார்?***

***பதில்:-*** நோயாளியின் சரீரத்தில் இருந்தும், உடற்பரிசோதனையில் இருந்தும் ஈ.சி.ஜிபரிசோதனை, இதயத்தசை அழிவுறுவதால் குருதியில் தோன்றும் ரோப்போனின் ஜயின் அளவு, எக்கோ பரிசோதனை மூலம் உறுதிப்படுத்துவர்.

***கேள்வி:- முடியுறாக்குருதிக் கலன்களின் குருதிகட்டிபடல் தடுக்கும் முதல் உதவி மருந்து யாது?***

***பதில்:-*** அஸ்பிரின் குளிகை அல்லது குளோபிடோகிறல் குளிகையை எடுத்தல் வேண்டும்.

கேள்வி:- முடியுறா குருதிக்கலன்களில் ஏற்படும் குருதிக்கட்டியைக் கரைக்க உடனடியாகக் கொடுக்கப்படும் மருந்து எது?

***பதில்:-*** ஸ்ரேப்ரோகைனேஸ் எனும் சேலன்மூலம் செலுத்தப்படும் மருந்து இதனால் குருதி ஓட்டம் மீள ஏற்படும்.

***கேள்வி:- அவசர சிகிச்சைப் பிரிவில் மாரடைப்பு நோயாளியின் கவனம் எத்தகையது?***

***பதில்:-*** நோயாளியின் இதயத்துடிப்பு அதிகரிக்காமலும் குறைவடையாமலும் அவதானிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும் குருதி அமுக்கம் குறைவடைந்தால் சாதாரண நிலைக்கு கொண்டு வரலாம். கூடினால் குறைக்கவும் சிகிச்சை அளிக்கப்படும்.

***கேள்வி:- மாரடைப்பு நோய்க்கு அவசரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கும்போது சாதாரணமாக நோயாளி செயல்பட தொடங்கல் எப்படி?***

***பதில்:-*** இரண்டு நாட்களின் பின் கட்டிலில் இருந்து இறங்கி இருக்க அனுமதிக்கப்படுவர். ஆரம்பத்தில் இலகுவான உணவுகளேயே உண்ணல் வேண்டும். பின் ஈ. சி.ஜி, எக்கோ செய்யப்பட்டு முன்னேற்றங்கள் ஏற்பட்டால் 5-7நாட்களில் வீட்டிற்குச் செல்லலாம்.

***கேள்வி:- மாரடைப்பு நோய் ஏற்பட்ட வர் எவ்வளவு காலம் ஓய்வில் இருத்தல் வேண்டும்?***

***பதில்:-*** குறைந்தது ஒருமாதம் இலகுவான வேலைகளேயே செய்தல்வேண்டும்.

***கேள்வி:-*** மாரடைப்பு நோய் ஏற்பட்டவர்கள் தினமும் உட்கொள்ள வேண்டிய மருந்துகள்?

***பதில்:-***அஸ்பிரின் குளிகையை இரவில் பாதி எடுத்தால் இரத்தம் கட்டிபடும் தன்மை குறையும், ஏசிஈ. இன்றிவிட்டர் குளிகைகளான கப்டோபிறில், எனலோபிறில் என்பன இதயக்காயம் ஆற உதவும். கொலஸ்ரோல் அதிகமாக காணப்படின் சற்றின் வகை குளிசைகளை எடுத்தல் வேண்டும்.

நெஞ்சு நோ ஏற்படின் நைத்திரேற் வகைக்குளிசைகளை பாவித்தல் வேண்டும்.

***கேள்வி:-*** மாரடைப்பு நோய் ஏற்பட்டோர் உண்ணக்கூடிய உணவுகள் யாது?

***பதில்:-*** கொழுப்பு குறைவான உணவுகளை உண்ணவேண்டும். நார் பொருள் உள்ள உணவுகளையும் குறைந்த கலோரிப் பெறுமானம் உள்ள உணவுகளையும் அதாவது பழங்கள், மரக்கறிகள், தானியங்கள், மீன், ஆடைநீக்கிய பால், வெங்காயம், கொக்கோ என்பவற்றை எடுக்கலாம்.

பொரித்த உணவு, பாற்கட்டி, பட்டர், முழுஆடைப்பால், இறால், நண்டு, இறைச்சிவகைகள், முட்டை மஞ்சட்கரு என்பவற்றைத் தவிர்ப்பது நல்லது.

***கேள்வி:-*** மாரடைப்பு எற்பட்டால் அல்லது ஏற்படக்கூடிய ஒருவருக்கு நடக்கும்போது களைத்தல், படிகளில் ஏறமுடியாமை எவ்வாறு நோயின் கடூரத்தினை அறியலாம்?

***பதில:-*** நோயாளியை நடக்கவிட்டு, ஈ.சி.ஜி.இல் ஏற்படும் மாற்றங்களை அறிவதாலும், அஞ்சியோகிறாம் பரிசோதனை மூலமும்.

***கேள்வி:-*** முடியுறாக்குருதிக் கலன்களின் அடைப்பை நீக்க சத்திரசிகிச்சை சிறந்ததா? அல்லது அஞ்சியோ பீளாஸ்டி முறையும் சிறு குழாய் பொருத்தலும் நல்லதா?

***பதில்:-*** அஞ்சியோ பிளாஸ்டி, முறையில் மீளவும் குருதிக்கலன்கள் அடைபடும் நிகழ்வுகூட, சிறு குழாய் பொதுத்தலும் குருதி அடைபடும் வீதம்கூட, மேலும் செலவு சத்திரசிகிச்சையை விடக் கூட, சிறந்த முறையில் சத்திர சிகிச்சை செய்தால் 10 வருடங்களுக்கு வயது இளமையாகும். அவர்கள் மருந்துகளையும் பாவித்தல் அவசியம். ஏனெனில் மீளவும் குருதிக்கலனில் அடைப்புகள் ஏற்படாதிருக்க.

**டாக்டர் சி.யமுனாநந்தா**

சத்திரசிகிச்சை செய்யமுடியாதவர்களுக்கு அஞ்சியோ பிளாஸ்டி முறை நல்லது. மேலும் சிறிய அடைப்புகளுக்கும் அஞ்சியோ பிளாஸ்டி முறை நல்லது. □

# ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்போம்!
# வெண்மை வாணிப சங்கம் அழைப்பு

(புங்குடுதீவு)

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்போம் என வெண்மை வாணிப சங்கத்தின் யாழ்.மாவட்ட ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்,

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர்கள் தமிழின அழைப்பிற்கான அங்கீகாரத்தையே தமது சிங்கள தேசத்து மக்களிடம் கோரி நிற்கின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க இருவரிடமும் சமாதானத் தீர்வுக்கான ஆக்கபூர்வமான திட்டங்கள் எதுவுமே இல்லை என்பது இவர்களது தேர்தல் விஞ்ஞாபனங்களிலி ருந்து தெளிவாகத் தெரிகிறது.

மஹிந்த ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்கவும், தமிழ் மக்கள் மீதான போரினைத் தினித்தவர்கள், தமிழ் மக்கள் கொல்லப்பட்டமை, தமிழ் இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் காணாமல் போனமை, சொத்துக்கள் அழிக்கப்பட்டமை முதலியவற்றிற்கு தயங்காது முன்னேற்பாடுகள் செய்தவர்கள், தமிழின அழிப்பை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளவர்கள்.

இவர்களிடத்தில் அதிகாரம் இருந்த போதெல்லாம், சமாதான தீர்வுககான, போர் நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்த என்ன செய்தார்கள்? மாறாக பெரும் சதி வலைப் பின்னலை பின்னுபவர்கள்,

இவர்களுக்கு வாக்களிப்பதென்றால் நம்மை இவர்களுக்குத் தாரைவார்த்தவர்கள் ஆவோம். நம்மை அழிப்பதற்குத் தடியெடுத்துக் கொடுப்பவர்கள் ஆவோம்.

ஜனாதிபதித் தேர்தல் அன்று வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லாது விடுவோம். கட்டாயமாக வாக்களிக்க வேண்டும் என்று எந்தச் சட்டத்திலும் கூறப்படவில்லை.

தமிழ் பேசும் மக்களும், அவர்களது பொது அமைப்புக்களும் ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில அக்கறை கொள்ளவில்லை; அதனால ஸ்ரீலங்கா மேலாதிக்கத்தை தமிழ்த்தேச மக்கள் ஏற்றுக் கொளளவில்லை என்பதை அனைத்து உலகத்திற்கும் புரிய வைப்போம எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-126)

# நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கை

தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் வடமராட்சி கிழக்கு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து வடமராட்சி கிழக்கிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் நுளம்புக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன.

வடமராட்சி கிழக்கில் மாமுனை தொடக்கம் கேவில் வரையான இடைத்தங்கல் முகாம்களில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையாக நீர் நிலைகளில் குடம்பிகள் அழிக்கப்படவுள்ளன.

இச் செயற்பாடுகளில் அவ்வப்பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று மருதங்கேணி பொதுச் சுகாதார பரிசோதகர் க.இளங்கோ தெரிவித்துள்ளார். (த-49)

# மின்சாரம் வழங்கப்படாததால் சரசாலை தெற்கு மக்கள் கவலை

(யாழ்ப்பாணம)

சரசாலை தெற்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்டிருக்கும் வீடுகளுக்கு இன்னமும் மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருப்பது குறித்து அப பகுதி மக்கள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

இப் பகுதியில் இருக்கக் கூடிய வீடுகளுக்கு 1970ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் 2000ஆம் ஆண்டு யுத்தத்தின் போது மின் விநியோகம் யாவும் சீர் குலைந்த நிலைக்குள்ளாகியது. எனவே இப்பகுதிக்கு புனரமைப்புத் திட்டத்தின் கீழேயே மின்சாரம் வழங்கப்படவேண்டும்.

ஆயினும் இப்பகுதிக்கு மின்சார இணைப்பு வேலைகள் செய்யப்பட வேண்டுமாயின் மின் கம்பங்களுக்கான நிதியை அப் பகுதி மின்பாவனையாளர்களே வழங்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால், அவர்கள் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (த-16)

# தேர்தல்கால வாக்குறுதிகளை நம்ப இனியும் நாம் தயாராக இல்லை
## சிவாஜிலிங்கம் எம்.பி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேடபாளர்களும் எமக்கான பொருத்தமான தீர்வை முன்வைக்கத் தவறிவிட்டனர் என்று கடந்த வியாழக்கிழமை மாலை வல்வெட்டித்துறையில் தனது அலுவலகத்தில் வைத்து ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களாகிய ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரும் இனவாதத்தை மீண்டும் வெளிப்படுத்துவது போன்ற கருத்துக்களையே வெளிப்படுத்தி வருகின்றனர்.

காலங் காலமாக சிங்கள அரசியல் தலைமைகளால் முன்வைக்கப்பட்ட பல்வேறு கருத்துக் களால் எமக்கு நிகழ்ந் தது என்ன? எம்மைப் பொறுத்த வரையில் இந்த ஜனாதிபதித் தேர்தலில் நாம் அக்கறை கொள்ளத் தேவையில்லை என்பதையே நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

எமது இனத்தின் போராட்டத்திற்கு ஓர் நியாயமான தீர்வை முன்வைத்திருந்தால் நாம் இத் தேர்தலில் யாரையாவது ஆதரித்திருக்க முடியும். ஆனால் அவ்வாறான தன்மை காணப்படாத போது நாம் யாரை ஆதரிப்பது இதனால் எமக்கு என்ன பயன் நிகழப்போகின்றது.

வேட்பாளர்களது வாக்குறுதிகளை நம்ப நாம் இனியும் தயாராக இல்லை என்பதையும் இத் தோதலின் மூலம் வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-7)

# இஸ்லாமின் முக்கிய எதிரி ராணி எலிசபெத் வீடியோ மூலம் அல்-கெய்டா மிரட்டல்

(இலண்டன்)

இஸ்லாமின் முக்கிய எதிரிகள் பட்டியலில் பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத் முக்கியமானவர் என ஒசாமா பின்லேடனின் அல் -கெய்டா இயக்கம் மிரட்டல் விடுத்துள்ளது.

ஒசாமா பின்லேடனின் அல் -கெய்டா தீவிரவாத இயக்கம் சமீபத்தில் உலகம் முழுவதிலும் உள்ள தனது தீவிரவாத இயக்கங்களுக்கு வீடியோ கசற் ஒன்றை அனுப்பியுள்ளது. 27 நிமிடங்கள் ஓடக் கூடிய அந்த வீடியோ கசற்றில் ஒசாமா பின்லேடனின் வலதுகரமாக செயல்படும் அய்மான் அல் - ஜாவாகிரி என்ற தீவிர வாதி ஆவேசத்துடன் உரையாற்றுகின்றான்.

அவன் தனது உரையில்,

கடந்த ஜுலை மாதம் இலண்டனில் அல் - கெய்டா தீவிரவாத இயக்கம் நடத்திய தற்கொலைப் படைத்தாக்குதலை நியாயப்படுத்தியுள்ளான். மேலும், பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத்தின் உயிருக்கு மிரட்டல் விடுத்துள்ளான். இது பற்றி அவன் மேலும், கூறுகையில், இஸ்லாம் எதிரிகளில் பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத் முக்கியமானவர். இஸ்லாமிய நாடுகளின் மீது பிரிட்டன் படையெடுப் பிற்கு காரணமாக இருந்தவர் அவரே எனவும் கூறியுள்ளான்.

இந்த வீடியோ காட்சி அரேபிய ரி.வியான அல் - ஜசீராவில் ஒளிபரப்பப்பட்டது. இந்த வீடியோ கசற் பற்றிய செய்தி 'தி சண்டே டைம்ஸ்' பத்திரிகையில் வெளியிட்டுள்ளது.

பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத்துக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதால் அவருக்கு வழங்கப்படும் பாதுகாப்பு பலப்படுததப்பட்டுள்ளது. (ற)



ஜப்பானின் பாரம்பரிய உடை கிமோனோ தலைநகர் டோக்கியோவில் மிட்சுகோசி பல்பொருள் அங்காடியில் விற்பனை கண்காட்சி நேற்று முன்தினம் நடந்தது. 12 அடுக்குகளால் நெய்யப்பட்ட கிமோனோ உடையை அணிந்து போஸ் கொடுக்கும் மொடல்....



தைவான் நாட்டின் கீலுங் நகரில் 42வது தங்க குதிரை விருது வழங்கும் விழா நேற்று முன்தினம் நடந்தது இவ்விழாவிலிருந்து...

# சீர்திருத்தங்கள் தொடரும்

## -ரொனி பிளேயர் உறுதி



(லண்டன்)

தீவிரவாதத்தடுப்புச் சட்டம் பாராளுமனறில் தோற்கடிக்கப்பட்ட போதிலும் பாடசாலைகள் மருத்துவமனைகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்வதைத் தடுக்க முடியாது என பிரிட்டன் பிரதமர் ரோனி பிளேயர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் பாராளுமன்றில் கடந்த வாரம் தீவிரவாதிகள் என சந்தேகப்படுவோரை நீண்ட நாள் காவலில் வைத்துக் விசாரிக்க வகை செய்யும் சட்டத்தை பிரதமர் ரோனி பிளேயர் கொண்டு வந்தார். இந்தச் சட்டம் சபை உறுப்பினர்களால் தோற்கடிக்கப்பட்டது.

இந்நிலையில் நியூஸ் ஆப்திவேர்ல்டு பத்திரிகையில் ரோனி பிளேயர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தீவிரவாதச் சம்பவங்களில் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோரை 90 நாட்கள் வரை சிறைக் காவலில் வைத்திருக்க பொலிஸார் வாரம் ஒரு முறை நீதிமன்றத்தின் ஒப்புதலைப்பெற வேண்டியுள்ளது. இதைத் தவிர்க்கும் வகையில் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டது.

ஆனாலும், இந்தத் தீவிரவாத தடுப்புச் சட்டம் கடந்த வாரம் பாராளுமன்றில் தோற்கடிக்கப்பட்டது. சில சமயங்களில் இதுபோன்ற எனக்கு கடினமான சோதனை ஏற்படுகிறது. பிரிட்டனின் பொருளாதாரம் வலுவாக உள்ளது. தேசிய சுகாதாரப் பணி மற்றும் பாடசாலைகள் நல்ல முறையில் வளர்ச்சி கண்டுள்ளன.

தீவிரவாதத்தடுப்புச் சட்டம் தோற்கடிக்கப்பட்டபோதிலும் இங்கெல்லாம் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதை யாராலும தடுத்துவிடமுடியாது வன்முறை, தீவிரவாதம் போன்ற சமூக விரோதப் போக்குகள் நமது சமூகத்தில் பிளவை ஏற்படுத்தத் தொடங்கிவிடும். எனவே இதற்குக கடுமையான நடவடிக்கைகள் தேவைப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார். (ற)

## 'டோலி'க்கு அடுத்ததாக 'ஸ்நப்பி'

# குளோனிங் நாய்க்குட்டி உருவாக்கம்

(நியூயோர்க்)

உலகிலேயே முதன் முறையாக குளோனிங் முறையில் நாய்க்குட்டி உருவாக்கப்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டின் உலகின் மிகச்சிறந்த கண்டுபிடிப்பாக அமெரிக்காவின் 'டைம்ஸ்' பத்திரிகை தேர்வு செய்துள்ளது.

குட்டிபோட்டு பாலூட்டும் விலங்கினங்களில் உலகிலேயே முதன்முறையாக செம்மறி ஆட்டை பிரிட்டனைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குளோனிங் முறையில் உருவாக்கினர்.இதையடுத்துமனிதனைகுளோனிங் முறையில் உருவாக்கலாமா? வேண்டாமா? என்ற சர்ச்சை உலகம் முழுக்க எழுந்து அடங்கியது. இந்நிலையில், மனிதனைப் போல குட்டிபோட்டு பாலூட்டும் வகையான நாய் இனத்தை குளோனிங் முறையில் உருவாக கியுள்ளனர் கொரிய விஞ்ஞானிகள்.

கொரியாவில் உள்ள சியோல் தேசிய பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் வூசுக் வாங் என்பவர் தலைமையிலான 45பேர் கொண்ட உயிரியல் விஞ்ஞானிகள் இந்த குளோனிங் நாய்க்குட்டியை உருவாக்கி சாதனை படைத்துள்ளனர். தங்களது குளோனிங் நாய்க்கு 'ஸ்நப்பி' என்றும் என்றும் பெயர் வைத்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் பகுதியைச் சேர்ந்த 5 மாத நாய்க்குட்டி இந்த குளோனிங் பரிசோதனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த குட்டி நாய்க்குட்டியின் காதில உள்ள ஒரே ஒரு செல்லை மட்டும் பரிசோதனைக்காக எடுத்து குளோனிங் நாய்க்குட்டியை உருவாக்கியுள்ளனர். டோலி' செம்மறியாட்டுக் குட்டி குளோனிங் சோதனையின் போது கையாளப்பட்ட 'நியூக்ளியர் செல் டிரான்ஸ்பர்' தொழில் நுட்பத்தையே ஸ்நப்பி குளோனிங்கிலும் விஞ்ஞானிகள் கையாண்டுள்ளனர்.

உலகின் சிறந்த கண்டுபிடிப்புகளை நியூயோர்க்கிலிருந்து வெளிவரும் 'டைம்ஸ்' பததிரிகை தேர்ந்தெடுத்து வெளியிடுவது வழக்கம். அந்த வகை யில் இந்த 'ஸ்நப்பி' குளோனிங் நாய்க் குட்டி கண்டுபிடிப்பை அது வெளியிட்டுள்ளது. அது மட்டுமல்லாது இந்த 2005 ஆம் ஆண்டில் உலகின் மிகச் சிறந்த கண்டுபிடிப்பாக 'ஸ்நப்பியை தேர்வு செய்தும் அது கௌரவித்துள்ளது. (ற)

WORLD NEWS
உலக தரிசனம்

# 'சார்க்' இல் இணைய சீனா காத்திருப்பு

(டாக்கா)


சார்க் அமைப்பில் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை, பூட்டான், மாலத்தீவு, நேபாளம் ஆகிய ஏழு நாடுகள் உள்ளன. இதில் எட்டாவது நாடாக ஆப்கானித்தானையும் சேர்க்க வேண்டும். சார்க் அமைப்பின் பார்வையாளராக சீனா இடம்பெற அனுமதிக்க வேண்டும் என்றும தற்போது கோரிக்கை எழுந்துள்ளது.

பார்வையாளராக இடம்பெற சீனா கோரிக்கை விடுத்ததும் அது குறித்து ஆலோசிக்கும்படி வெளியுறவு அமைச்சர்களின் நிலைக் குழுவுக்கு சார்க் தலைவாகள் உத்தரவு பிறப்பித்துள்ளனர்

வெளியுறவு அமைச்சர்கள் ஆறு மாதம் கழித்து சந்தித்துப் பேசவுள்ளனர். அப்போது சீனா குறித்து எடுக்கப்பட்ட முடிவு குறித்து பரிந்துரைசெய்யப்படும. எனவே, 2007ஆம் ஆண்டு வரை சீனா காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஜப்பான், ஜேர்மனி, கனடா மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்புடன் சார்க் அமைப்பு இணைந்து செயல்பட வேண்டும் என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. இதன் அடிப்படையில் சீனாவுடனும் இணைந்து செயல்பட வேண்டும் என இந்தியா வலியுறுத்தி வருகிறது.

சார்க் அமைப்பின் உறுப்பினர் அந்தஸ்தை ஆப்கானிஸ்தானுக்கு வழங்க இந்தியா முழு ஆதரவு தெரிவித்துள்ளது. எனினும், இந்த அமைப்பில் இடம்பெற்றுள்ள சில நாடுகள் இதற்கு அனுமதியளிகக வில்லை. சார்க் வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் நிலை கமிட்டியில இது தொடர் பாக முடிவு எடுக்க முடியவில்லை. எனவே, இந்த விஷயத்தில் சார்க தலைவர்கள் இறுதி முடிவு எடுப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



நியூஸிலாந்தின் விரைவு போர்க் கப்பல் எச். எம்.என்.இசட்.எஸ் வெலிங் டனுக்கு வயதாகிவிட்டதால் குண்டு வைத்து நேற்று முன்தினம் தகர்க்கப்பட்டது. ஒரே நிமிடத்தில் கடலில் கப்பல் மூழ்கியது கரையில் இருந்தும் ஹெலி கொப்டர்களில் பறந்தபடியும் ஆயிரக்கணக்கானோர் இக் காட்சியைப் பார்வையிட்டனர்.



நாளை புதன்கிழமை தாய்லாந்தில் மிதக்கும் திருவிழாநடைபெறவுள்ளது இதையொட்டி வடக்குத்தாய்லாந்தில் விளக்குகள் வானத்தில் மிதக்க விடப்படும் காட்சி.

# சச்சின் 46

## மீள் பார்வை

என். சொக்கன்

# ஒரு புயலின் கதை

## 19.சச்சின்: இன்றும் நாளையும்

மும்பை பாந்த்ராவின் வீதிகளிலும், அரைகுறை மைதானங்களிலும் துவங்கிய சச்சினின் கிரிக்கெற் பயணம், சிவாஜி பார்க்கில் நிலைபெற்று, பாகிஸ்தான் முதலாக உலகின் கிரிக்கெற் நாடுகள் ஒவ்வொன்றையும் சுற்றிவந்து குறிப்பிடத்தக்க மைதானங்கள் எல்லாவற்றிலும் சாதனைச் சிறகுகளைச் சேர்த்துக்கொண்டு இன்னும் குறையாத தாகத்துடன் தொடர்ந்து கொண்டிருக்கிறது!

1989-ல் இந்திய அணிக்காக விளையாடத்துவங்கிய பிறகு சச்சினின் சர்வதேச கிரிக்கெற்



வாழ்க்கையில் இது பதினைந்தாவது வருடம். இந்த 15 ஆண்டுகளுக்குள் சச்சின் செய்
திருக்கிற சாதனைகளில் பெரும் பாலானவற்றை, இதற்கு முன்பிருந்த, இனி வரும்
கிரிக்கெற்றர்கள் எல்லோரும் ஆச் சரியத் தோடுதான் அண்ணாந்து பார்க்க
வேண்டியிருக்கும். ஒரு நாள் போட்டிகளில் பத்தாயிரத்தைக் கடந்தாகி
விட்டது. டெஸ்ட் போட்டி களில் பத்தாயிரத்தைக் தொடப் போகிறார். ஒரு நாள்
போட்டிகளில் பத்தாயிரத் தைத் தொடப் போகிறார் ஒரு நாள் போட்டி
களிலும் டெஸ்ட் போட்டி களிலும் தலா முப்பது சதங்களைக் கடந்
தாகி விட்டது. கிட்டத் தட்ட ஐம்பது ஆட்ட நாயகர் விருதுகள்,
தொடர்நாயகர் விருது கள், பரிசுகள், கௌவுரவங்கள், இந்திய மக்க
ளின் அளவற்ற அன்பு... இத்தனையும் முப்பது வயதுக் குள் ளாக
என்று நினைக்கிற போதுதான் பிரமிப்பிலும் பூரிப்பிலும் திளை
(கை)த்துப் போகி றது மனம்!
"அதிரடியாக விளையாடுகிற சின்னப்பையன்" என்னும்
எளிய அறிமுகத்து டன்தான் இந்திய அணியினுள் நுழைந்தார்
சச்சின். இன்று அணியின் மூத்த ஆட்டக்காரராக சக
வீரர்களுக்கு தன் னுடைய அனுபவத்தையும் ஞானத்தையும்
பகிர்ந்து கொடுத் துக்கொண்டு, அவர்களுக்கு வழி காட்டியா
கவும் பின் பற்றுதலுக்கு உரிய இலட்சிய பிம்பமாகவும்
ஜொலிக்கிறர் சச்சின். இந்த மாற்றம் ஓர் இரவில்
நடந்ததில்லை. கடினமான உழைப்பும், இடை
விடாத பயிற்சியும். தளர்வு அறியாத தன்னம்
பிகையும் சேர்ந்துதான் இன்றைய சச்சின் பரிணமித் திருக்
கிறார்!

இந்தப் பதினைந்து ஆண்டுகளில் சச்சினுடைய ஆட்டபாணியில் சில மாற்
றங்கள்- ஆரம்பத்தில் எதைப் பற் றியும் கவலைப்படாத அதிரடி ஆட்டம். ஆனால்
இப்போது அணியின் முது கெலும்பே அவர்தான் என்றான் பிறகு,
தேவைப்படும் நேரங்களில் விரை வாகவும் பொறுப்போடும் விளையாடுகிற முதிர்ச்
சியும் நிதானமும் கலந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறார் சச்சின்.

இப்போதும், சச்சினின் சிறப்பான ஆட்டத்தால் இந்தியா பல ஒரு நாள் போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கிறது. 'சச்சின் ஜெராக்ஸ்'எனப்படும் வீரேந்திர சேவாக் உள்பட பல இளம் வீரர்கள் இந்திய அணியின் புதிய நம்பிக்கை நட்சத்திரங்களாக உரு வெடுத்திருக்கும்



போதும், இந்திய பேட்டிங்கைப் பொறுத்த வரை சச்சின்தான் எல்லோரையும் வழி
நடத்திச் செல்லவேண்டியிருக்கிறது. அவருடைய பொறுப்பான ஆட்டமும்
ஆலோசனைகளும் அணிவீரர்களுக்கு நம்பிக்கையையும் மன
தைரியத்தையும் தருகிறது. சச்சினோடு ஒரே அணியில்
இணைந்து விளயைாடுவது பெருமையான விஷ யம் என்று
அனுபவம் மிக்க வீரராகியு ராகுல் திராவிட்
சொல்கிறார்- எனும்போது மற்ற இளைய
வீர்களுக்கெல்லாம் அவர் தங்களோடு
விளையாடுகிறார் என்கிற எண்ணமே பெரிய தெம்
பாக இருப்பதில் ஆச்சரிய மில்லை.

உதாரணமாக இந்திய அணி சமீபத்தில்
ஆஸ் திரேலியா, பாகிஸ்தான் உள்ளிட்ட
வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்து,
குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றது. இந்த ஆட்டங்
களில் எவற்றையும் தனியொரு மனிதரின் திற
மையினால் வென்றவை என்று சொல்லிவிட முடியாது! ஆகவே ஒரு
காலத்தில் 'சச்சின் விழுந்தால் இந்தியா அவ்வ ளவுதான்!' என்றிருந்த
பழைய நிலைமை மெல்ல மெல்ல மாறிக் கொண்டிருக்கிறது.
அணியிலுள்ள மற்றவர்களின் திறமையை இந்திய மக்கள் உணர்ந்து மதிக்கத்
துவங்கி இருக்கிறார்கள்!

இந்த மாற்றம், சச்சினின் ஆட்டத்தைப் பாதித்திருக்கிறதா? வெளிப்படையாக இல்லாவிட்டாலும் மனத்தளவில்? இந்தக் கேள்விக்கு பதில் சொல்வது மிகவும் சிரமமான காரியம். ஒரு ஙிதத்தில் ஆமாம். இன்னொரு விதத்தில் இல்லை!

சமீப காலமாக அவர் தனது ஆட்ட பாணியை மாற்றிக்கொண்டிருக்கிறார் என்று கூறப்படுகிறது. மின்னல் வேக ஆட்டங்களையும், ரன் குவிப்புகளையும் தனது இளைய தோழர்களின் பொறுப்பில் விட்டுவிட்டு, இப்போதெல்லாம் தன்னுடைய விக்கெற்றின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு, அதற்கேற்ற கவனத்துடனும் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடனும் விளையாடுகிறார் சச்சின். இதற்கு நல்ல உதாரணமாக சமீபத்தில் ஆஸ்தி[illegible]ரலியாவுக்கு எதிராக அவர் அடித்த இரட்டை சதத்தைக் குறிப்பிடலாம்!

சுறுசுறுப்பான ஒரு நாள் போட்டிகளிலும்கூட, சச்சினின் இந்த பாணியைப் பார்க்க முடிகிறது. கடந்த உலகக் கோப்பை 2003-ன் பெரும்பாலான ஆட்டங்களில் விரைவான, ஆனால் அதேசமயம் ஆபத்துகளைத் தேடிப் போகாதபடி பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் சச்சின்!

இதனால் சச்சினின் ரசிகர்கள் பலர் ஏமாற்றம் அடைந்திருப்பதும் உண்மைதான். சச்சின் விளையாடுவதைப் போலவே இல்லை! வேறு யாரோ விளையாடுவதைப் பார்க்கிற மாதிரி இருக்கிறது! என்று அவர்கள் சலித்துக்கொள்கிறார்கள். ஒரு நாள் போட்டிகளைப் போலவே டெஸ்ட் போட்டிகளிலும் சச்சின் தனது தரமான ஆட்டத்தின் மூலம் அனைவரையும் கவர்ந்திருக்கிறார் என்றாலும் இந்தியாவுக்காக அவர் வென்று தந்த டெஸ்ட் போட்டிகள் மிகக் குறைவு என்னும் கசப்பான உண்மை. தொண்டையில் சிக்கிய முள்ளாக உறுத்துகிறது.

(தொடரும்)

# மிலிந்தவின் உயிருக்கு அச்சுறுத்தல்

## மஹிந்த எச்சரிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொடவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட் டுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் மிலிந்த மொறகொட எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றும் மஹிந்த கேட்டுக்கொண்டுள்ளார்.

தேசிய பாதுகாப்பு சபையினருடன் அண்மையில் மிலிந்த மொறகொட ஆலோசனை நடத்தினார். அவரது பாதுகாப்பு இரு மடங்கு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ. மற்றும் இந்திய புலனாய்வு அமைப்பான றோ ஆகியவற்றின் உளவாளியாக மிலிந்த மொறகொட செயற்படுவதாகக் கூறி அவரது உயிருக்கு குறிவைக்கப் பட்டிருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ற)

# சுனாமியால் பாதிப்படைந்த வீடுகளை புனர்நிர்மாணிக்க நிதியுதவி அதிகரிப்பு

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட வீடுகளை புனர்நிர்மானம் செய்வதற்கு வழங்கப்படும் நிதியுதவியைத் துரிதப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் கீழ் 2இலட்சத்து 50 ஆயிரம் ரூபா முதல் 5 இலட்சம் ரூபா வரை நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

25வீடுகளுக்காக இந்த நிதியுதவியை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்காக 10ஆயிரம் மில்லியன் ரூபாவை நிதியுதவியாக இலங்கை அரசாங்கத்திற்கு வழங்க சர்வதேச நிறுவனங்கள் நிதியமைச்சுக்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே நிதியுதவி வழங்கப்பட்டவர்களும் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.பிரதேச செயலக ரீதியாக இந்தப் புதிய திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட 25ஆயிரம் வீடுகளுக்குப் புறம்பாக புதிதாக 15ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ற-9)

## வினாத்தாளை பெற்றுக்கொள்க

க.பொ.த. (சா/த)மாணவர்களுக்கான மாவட்டத் தேர்வு வினாத்தாள் பொதியினை எதிர்வரும் 20ஆம் திகதிமுதல் அந்தந்தக் கோட்டக் கல்விப்பணிப்பாளரிடம் தினந்தோறும் பெற்றுக்கொள்ளுமாறு தீவகவலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ற)

## விளக்க மறியல்

(கொழும்பு)

கண்டி நகரில் கைதுசெய்யப்பட்ட மூன்று இளைஞர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி மஜீஸ்திரேட் நீதவான் திருமதி றணசிங்க நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

கண்டியில் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களையும் பொலிஸார் நேற்று முன்தினம் கண்டி நீதிமன்றில் ஆஜர் செய்த போதே நீதவான் இவ்வுத்தரவை பிறப்பித்துள்ளார்.

கண்டியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிர சாரக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பேராதனை வீதியில் உள்ள இந்து கலாசாரமண்டபத்தில் தீடீர் சோதனையை மேற்கொண்டபோது இவ் மூன்று இளைஞர்களையும் கைது செய்ததாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். (ற-8)

## சரஸ்வதி சிலை திரை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

விமாகி உரிமையாளர் கிரிதரனது அன்பளிப்புடன் வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை முன்றலில் உருவாக்கப்பட்ட சரஸ்வதிசிலை கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலம் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

சரஸ்வதி தேவியின் உருவச் சிலையை விமாகி உரிமையாளர் கிரிதரன் திரை நீக்கம் செய்து, வைத்தார். (த-132,133)

## அபராதம் விதிப்பு

(துன்னாலை)

வீதியில் சமாந்தரமாக துவிச்சக்கரவண்டியில் சென்றவருக்கு பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கெடுக்கப்பட்ட போது குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா ரூபா 1000 அபராதம் விதித்தார் .

அத்துடன் நான் இனிமேல் வீதியில் சமாந்தரமாக துவிச்சக் கர வண்டியை செலுத்தமாட்டேன் என 1000 தடவைகள் எழுதிக்காட்டி விட்டு செல்லுமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (த-101)


அன்பு வாசகர்களே...

உங்கள் வலம்புரியின் ஆறாவது ஆண்டின் நிறைவில் பல பக்கங்களைக்கொண்ட

வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்

வெளிவரவுள்ளது.

கல்வி. மருத்துவம். உளவியல். சோதிடம்.
ஆன்மீகம். விஞ்ஞான ஆராய்ச்சிகள். வரலாறு.
பொருளியல். சமூகவியல். அரசியல். கவின்கலை
தொடர்பான பல்துறைசார் ஆக்கங்கள்
இச்சிறப்பிதழில் இடம்பெறவுள்ளன.

துறைசார் அறிஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்களிடம் இருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

உங்கள் ஆக்கங்களை

பிரதம ஆசிரியர்
வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்
வலம்புரி
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

நிறைவு விழாச் சபை, வலம்புரி

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பலாத்காரம்கூடாது என்பது கருத்தல்ல. பலாத்காரத்தைப் பிரயோகிப்பதா? அல்லது தீமைக்கு அடிபணிவதா என்ற நிலை ஏற்படும்போது பலாத்காரத்தைப் பிரயோகிப்பதே சிறந்ததாகும்.

- டாக்டர். இராதாகிருஷ்ணன்

வலம்புரி

## புதியவர் செய்யவேண்டியது நாட்டைப் பிரிப்பதே!

ஜனாதிபதித் தேர்தல் குறித்து வடபகுதி எந்தவித ஆரவாரமுமின்றி அமைதியாக இருக்கிறது. யாருக்கு வாக்களிப்பது என்ற கேள்வி மறந்து போய் ஏன் வாக்களிக்கவேண்டுமென்ற கேள்வி தமிழ்மக்களின் மனங்களை ஆக்கிர மித்துக்கொண்டுள்ளது.

ஒரு காலத்தில் இலங்கைத் தேர்தல்களில் அக்கறைகொண்டிருந்த வடபுலத்து தமிழ் மக்கள் ஏன்? இவ்வாறு மாறினார்கள், இம் மாற்றத்திற்கான காரணமென்ன? என்பது சீர்தூக்கிப் பார்க்கவேண்டிய விடயமாகும்.

அழகிய இலங்கைத் தீவில் இன, மத, பேதம் மறந்து நாமும் இலங்கையர் என மார்தட்டி வாழமுடியுமென்றே தமிழ்மக்கள் கருதினர்.

ஆனால் இனவாதம் கொண்ட சிங்கள ஆட்சியாளர்கள் இலங்கை என்ற ஒருநாட்டின் அரசியல் எல்லைக்குள் தமிழர்களும், சிங்களவர்களும் ஒற்றுமையாக - எக்காலத்திலும் வாழமுடியாது என்பதை நிருபித்துவிட்டனர்.

அதன் விளைவாகவே ஆயுதப் போராட்டம் உருவெடுத்தது. ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சி என்பது நேற்று, இன்று ஏற்பட்டதல்ல. அதற்கு நீண்டதொரு பரிமாண வளர்ச்சி உண்டு.

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகட்டத்திலாவது சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்த் தலைவர்களுடன் பேச்சுநடத்தி தீர்வுகண்டிருக்கலாம். எனினும் அதனைச் செய்வதற்கு அவர்கள் முன்வரவில்லை.

மாறாக ஆயுதப் போராட்டத்தை நசுக்கவும், தமிழ்மக்களை இனரீதியாக அழிக்கவுமே முயற்சித்தனர். அவர்களின் இந்த முயற்சி இலங்கை பௌத்த சிங்கள தேசம் என்ற பெயரால் முன்னெடுக்கப்பட்டது.

அன்றுவிட்ட தவறையே சிங்கள ஆட்சியாளர்கள் இன்று அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் தீர்வுகாணப்படவேண்டிய பிரச்சினைக்கு 15 வருடங்கள் காலங்கடத்தப்பட்டால் அதற்கான தீர்வும் மாற்றமடையும் என்பது உணர்ந்துகொள்ளப்படவேண்டிய உண்மை.

ஒற்றை ஆட்சியின் கீழ் தீர்வு, சுயாட்சி முறை, அதிகாரப் பரவலாக்கம் என்ற விடயங்கள் எல்லாம் தந்தை செல்வநாயகத்தின் காலத்திற்குரியது.

இது தலைவர் பிரபாகரனின் காலம் - தமிழ் மக்கள் தமக்கென தனித்துவமான பிராந்தியத்தை தமது படை வலிமையுடன் பாதுகாத்துவருகின்ற காலம்.

கடற்படை, விமானப்படை, தரைப்படை என்ற உலகநாடுகளின் வழமைக்குரிய முப்படைகளுடன் தற்கொலைப் படையையும் தமிழர் கொண்டிருக்கும் காலம்.

இக்காலத்திலும் சுயாட்சி, அதிகாரப் பரவலாக்கல் என்ற உச்சரிப்புக்கள் இருக்குமாயின் புதிய நோய்க்கு பழைய மருந்து என்ற கதையாகவே அது இருக்கும்.

ஆக நடக்கப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றிபெறுகிறாரோ அவர் செய்யவேண்டிய உடனடிக் காரியம் நாட்டைப் பிரித்து தமிழர்களுக்குத் தனிநாட்டைக் கொடுப்பதேயாகும்.

இந்த புத்திசாதுரியமான வேலையைச் செய்வதற்கு புதியவர் மறந்தால் - மறுத்தால் நாடுமுழுவதையும் கொடுக்கும் அவலமும் ஏற்படலாம்.

# புலிகளை பலவீனப் படுத்தவும் இல்லை கருணா விவகாரத்துடன் தொடர்புமில்லை

## -ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

**விடுதலைப்புலிகளின் பலத்தை நான் குறைக்கவுமில்லை, கருணா குழுவின் பிரச்சினையுடன் எனக்கு எவ்வித தொடர்புமில்லை என ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இது விடயம் தொடர்பாக அந்த நேர்காணலில் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளதாவது,

விடுதலைப்புலிகளின் பலத்தை நான் குறைக்கவுமில்லை. கருணா பிரிவின் பிரச்சினையுடன் எனக்கு எவ்வித சம்மந்தமுமில்லை. நான் கருணாவை சந்தித்ததும் இல்லை. அன்ரன் பாலசிங்கத்தையே பிறோமதாஸ அரசாங்கத்தின் பேச்சுவார்த்தையின் போது சந்தித்தேன்.

நான் விடுதலைப் புலிகளை இணைத்து செயற்பட முனைந்தேன். கருணா பிரச்சினை 2004 மார்ச் மாதத்திலேயே உருவானது. பாதுகாப்புப்பிரிவோ, புலனாய்வுப் பிரிவோ இது பற்றி அறிந்திருக்கவில்லை. பத்திரிகைகளில் இது குறித்து தகவல்கள் வெளிவந்த பின்பு தான் எனக்கு இது தெரியவந்தது. அது அவர்களது உள் பிரச்சினை. இதில் நாம் தலையிடத்தேவையில்லை.

உண்மையில் இந்த நிகழ்வு துரஷ்டவசமானது. இதனால் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. சமாதான நடவடிககைகள் பாதிக்கப்பட்டுள்ளன. எவரும் கொலை செய்ய இடமளிக்க மாட்டோம்.ஒவ்வொரு குழுக்களும் ஆயுதங்களுடன் கிழக்கிலும்,கொழும்பிலும் செயற்படுவதை இந்த நாட்டு மக்கள் விரும்பமாட்டார்கள்.

நான் பசி,நிவாரணம் பற்றி பேசுகின்றேன். யுத்தத்தை நிறுத்தியுள்ளேன் .சமாதானத்தை நிலை நாட்டினேன்.இன்று நாட்டில் பாரிய பிரச்சினைகள் உள்ளன. பசி என்பது எல்லோருக்கும் பொதுவானது. ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முதல் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவிரும்புகின்றேன். தெற்கை விட வட- கிழக்கில் பிரச்சினைகள் அதிகம். அவற்றை சீர்தூககிப்பார்த்து தீர்வினைக் காணவேண்டும்.

யுத்த நிறுத்த அமுலாக்கத்தால் பொருளாதாரம் வளர்ச்சி கணடது. 2003ஆம் ஆண்டு அபிவிருத்தி வேலைகள் ஆரம்பமாயின. அவை வட-கிழக்கில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன. 2004இல் வட-கிழக்கில் விவசாயத்தை ஆரம்பிக்க முடிந்தது. இங்கு நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டதால் 2004இல் அரிசியில் தன்னிறைவை காணமுடிந்தது.

இன்று கிளிநொச்சி முக்கிய நகரம். வணிக வாய்ப்புக்கள் பெருகின. எனினும், இந்த அபிவிருத்தி போதுமானதல்ல. இன்னும் பல அபிவிருத்தித்திட்டங்கள் தேவை. கடற்கோளினால் மேலும் அழிவு ஏற்பட்டது. இதனாலேயே நான் கடல்கோள் நிவாரணத்திற்காக365 நாட்களை ஒதுக்கியிருந்தேன். புலம்பெயர்ந்தோருக்கு பிரத்தியேக அமைச்சு ஏற்படுத்தப்படவுள்ளது. மீண்டும் யுத்தத்திற்கு செல்லாது சமாதானத்தை பேண வேண்டியுள்ளது. அதற்கு முக்கியத்துவம் அளித்துள்ளோம்.இவை எல்லாவற்றுக்கும் மேலாக பசி நிவாரணம் முக்கியமானது.

இவ்வேலைகளை செய்வதற்கு 2003,2004ஆம் ஆண்டளவிலே எமக்கு நிதி கிடைகவிருந்தது. டோக்கியோ சம்மேளனத்தின் மூலம் கிடைக்கவிருந்த பணத்தில் வட-கிழக்கிற்கு நிதி ஒதுக்கப்படவிருந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு இதுபற்றி பிரச்சினை இல்லை. உதவி வழங்கும் நாடுகளுடன் கலந்துபேசுமாறு நான் கூறினேன். இத்தொகையை அதிகரிப்பது குறித்து எமக்கு ஆட்சேபனை இல்லை. எனினும், உதவி வழங்கும் நாடுகள் குறிப்பிட்ட விதிகளின் படியே இவற்றை தீர்மானித்திருந்தன.

சிரான் அமைப்பில் குறைபாடுகள் இருந்தன. இதே வேளை, இவ்வாறான அமைப்புக்களின் இயக்கம் இலங்கை போனற நாடுகளில் துரிதமாக நடைபெறுவதில்லை. சிரான் அமைப்பை ஏனையவற்றைவிட அதிவிரைவாக ஆரம்பிக்க முடிந்தது. எனினும்,மக்கள் அபிவிருத்தி வேலைகள் ஓரிருமாதங்களில் நிறைவேறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. காரணம அங்கு தீா மானம் எடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. நானும் அதனை சுட்டிக்காட்டினேன். உலக வங்கியின் வழிகாட்டலிலேயே அது இயங்குகின்றது. அதனை மறு சீரமைக்கும் போது அல்லது புதிய அமைப்பொன்றை ஆரம்பிக்கும் போது இவ்வாறான பிரச்சினைகளை நிவிர்த்தி செய்ய நினைததேன். சிரான் மூலம் விடு தலைப்புலிகளையும், முஸ்லிம்களையும் இணைத்துக் கொண்டு நாம் செயற்பட விருந்தோம். எனினும் அப்போது பேச்சு வார்த்தையில் இருந்து விடுதலைப்புலிகள் விலகத்தா மானித தார்கள். அப்போது மீண்டும் பல மாத காலதா மதம் ஏற்பட்டது. நாம் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு திரும்பும் காலத்தில் எம்மிடம் இருந்து 3 அமைச்சுக்கள் ஜனாதிபதியால் கையேர்க்கப்பட்டன. அத்துடன், பேச்சுக்கள் சர்குலைந்தன என்றார்.

சமாதானம் என்ற போர்வையில் விடுதலைப்புலிகளை ஓரம் கட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டமை தொடர்பாக வினாவியபோது நான் ஏற்கனவே இருந்த பாதுகாப்பிற்கு அமைவாகவே செயலாற்றினேன். உண்மையிலேயே சமாதானத்தின் காலத்திலேயே பாதுகாப்புபபடைகள் யாவும் பயிற்சி மேற்கொள்கின்றன. புலிகளுககு உலகம் சுற்றும் வாய்ப்பை வழங்கியதாக என் மீது தென்னிலங்கையில் குற்றம் சாட்டப்பட்டது. சமாதான நடவடிக்கையின் போது இரு தரப்பிடமிருந்தும் குற்றச்சாட்டுக்கு இலக்காக நேரிடும். அதற்கு முகம் கொடுக்காவிட்டால் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. அல்லது ஒருபக்க நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். விடுதலைப் புலிகளுக்கு எதிராக கோஷமெழுப்பவேண்டும். அல்லது புலிகளுக்கு சார்பாக நடந்து சிங்களவரின் வசைக்கு ஆளாக வேண்டும்.

சமாதான நடவடிக்கையை முன்னெடுக்கும் காலத்தில் முதல் இரண்டு வருடங்களில் எல்லாப் பகுதிகளிலும் ஏச்சுப்பேச்சுக்கு இலக்காக நேரும்.ஏனெனில் இரு சாராரும் உறுதியான நிலைப்பாட்டிலேயே இதுவரை இருந்துள்ளனர். இரு பகுதியினரும் விட்டுக்கொடுக்கும்போது வசை பாடவே செய்வார்கள் .எல்லா மொழிப்பத்திரிகைகளும் இதனைச் செய்கின்றன.

நான் யாரையும் ஓரங்கட்ட நினைக்கவில்லை முதலில விடுதலைப் புலிகளிடம் பேசி குறிப்பிட்ட நிலைப்பாடு எடடப்படவேண்டும்.அதற்குப்பின் சுதந்திரக் கட்சியை அழைக்க வேண்டும். முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை ஏற்க வேண்டும். புலிகளும் முஸ்லிம் காங்கிரஸூம் சந்தித்தபோது, முஸ்லிம் பிரதிநிதித்துவம் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. படிப்படியாகவே முன்னேறிச்செல்ல வேண்டும் என்றார்.

சிரான் மற்றும் இடைக்கால நிர்வாக சபை உட்பட தமிழர் தரப்புக்கான வாய்ப்புக்கள் வழங்கப்படும் போது முஸ்லிம பிரதிநிதித்துவத்தை திணிப்பதன் மூலம் சிறுபான்மை சமூகங்களிடையே பகைமையுணர்வு ஏற்படுவதாக கூறப்படுவது பற்றி வினவியபோது,

தமிழ் மொழிபேசும் இரு மக்கள் பிரிவினரும் இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும். புலிகளும் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். முதலில் முஸ்லிமகள் தமக்குள்ள பிரச்சினைகளை தீர்க்கவேண்டும். சமாதான முயறசி நடவடிக்கையில் முதலில் நல்ல பெறுபேறுகள் கிட்டின. நாம் யாழ்ப்பாணம் சென்றால் புதிதாகக் கடடடங்களைக் காணலாம. முன்னேற்றம் உள்ளது. எனினும், பிரச்சினைகள் உள்ள இடங்களும் உள்ளன.

தெற்கில் இது பற்றிக் கூறினால் நாடு பிளவுபடும் என்கின்றாாகள் .வடக்கில் பிரச்சினைகள் உள்ளன. அதிஉயா் பாதுகாப்பு வலயப்பிரச்சினைகள் உள்ளன. இதற்கு சமாந்தரமாக அபிவிருத்தியும், ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தோம். தீர்வினைக் காண முடியவில்லை. விடுதலைப் புலிகள் அங்கு இருக்கவில்லை. மக்களை மீளக்குடியேற்றுவது தொடர்பாக புதிய நிகழ்ச்சி நிரல் அவசியம். இடைக்காலத்தன்னாட்சிச் சபை பற்றி பேசத் தயாராகவிருந்தோம். தெற்கில் நாம் இதனை ஏற்றுக்கொண்டதாக பரப்புரை செய்தார்கள். பேச்சுவார்த்தைகள் நடத்தி தீர்வு காணலாம். முதலில் நான் விடுதலைப் புலிகளுடன பேசுவேன்.எனவும் ரணில் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

# முஸ்லீம்களுக்கான சுயாட்சி தமிழர்களுக்கு எதிரானதல்ல



## -ஹக்கீம் தெரிவிப்பு

(கல்முனை)

முஸ்லிம்கள் சுயாட்சி கோருவது என்பது தமிழச் சகோதரர்களுக்கு எதிரானது அல்ல. என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். கல்முனையில் அஸ்ரப் நினைவு சதுக்கத்தில் இடம் பெற்ற முஸ்லிம் காங்கிரசின் 24ஆவது தேசிய மாநாட்டில் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தந்தை செல்வா முஸ்லிம்களின் சுயாட்சி கோரிக்கையை ஏற்றுக்கொண்டவர். தமிழ்த் தலைவர்களின் ஜனநாயகப் போராட்ட காலத்தில் அது ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால்,அதன் பின்னா் தமிழர் விடுதலைப்போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாறியது. வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு நாம் விடுககும் வேண்டுகோள் என்னவெனில் முஸ்லிம்களது பிரச்சினைகளோடு இணைந்து கொள்ளுங்கள் ஏன் முஸ்லிம் பிரச்சினைகளில் அமைதி காக்கிறீர்கள்? ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கைகளுக்கும் அதாவுல்லாவின் கொள்கைகளுக்கும் வேறுபாடு இல்லை. வடக்கு கிழக்கைப் பிரிக்கவேண்டும என்று ஜாதிக ஹெல உறுமயவின் கருத்துக்களை அதாவுல்லா வெளிப்படுத்துகிறார் என்றார்.(ந)


### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



**பக்தி என்னும் சூரியன் நமது இதயத்தில் உதயமாகத தொடங்கியதும், நமது செயல்கள் அனைத்தையுமே இறைவனிடம் அர்ப்பணித்து விட வேண்டும். என்ற விருப்பம் நமக்கு ஏற்பட்டு விடுகிறது. ஒரு கணம் இறைவனை நாம் மறக்க நேர்ந்தால் அது நமக்கு அளவில்லாத வேதனையைத் தருகிறது.**

சுவாமி விவேகானந்தர்



வன்னி மாவட்ட மக்களுக்கான தற்காப்பு பயிற்சி பெற்ற 5 வது அணி நேற்று வெளியேறியது. அவ்வணியில் பயிற்சி பெற்றவர்களை படங்களில் காணலாம்.

# மகிந்தவின் இறுதிக் கூட்டத்தில் இராணுவச் சீருடை கண்டெடுப்பு

(கொழும்பு)

பிரதமரும் ஜனாதிபதி வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றத் திட்டமிட்டிருந்த போதிலும் இறுதி நேரத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர் கலந்து கொள்ளவில்லை.

கொழும்பு பொரளை கம்பல் மைதானத்தில் தேர்தல் பிரசார மேடை அமைக்கப்பட்டு அங்கு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவ் வேளை மேடையைச் சுற்றி காவல் கடமையில் இருந்த இராணுவ வீரர்கள் அப்பகுதியில் இருந்து இராணுவ சீருடை ஒன்றைக் கண்டெடுத்தனர். அதன் பின்னாலேயே பிரதமர் இறுதி நேரத்தில் பிரசாரத்தில் ஈடுபடவில்லை.

ஆனாலும் தொலைபேசி ஊடாக அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் அவர் உரையாற்றியதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்தது.

இதே வேளை எதிர்க் கட்சி தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்காவின் இறுதிப்பிரசாரக்கூட்டம் மருதானை பஞ்சியாவத்தைப் பகுதியில் நடைபெற்றது. (ச-4)

# வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் நடமாடுவோர் கைது செய்யப்படுவர்

## பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் அநாவசியமாக நடமாடுவோரை கைது செய்யுமாறு பொலிஸ் தலைமையகம் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளது.

வாக்களிப்பு நிலையங்களில் இருந்து அரைக் கிலோமீற்றர் எல்லைக்குள் அநாவசியமாக நடமாடுபடுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றியன்ஸி பெரேரா தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகளில் இம்முறை சுமார் 60 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வடக்கு-கிழக்கிற்கான பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் ஏற்கனவே அப்பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ். பிரதேச தேர்தல் நடவடிக்கைகளுக்காக பொலிஸ் திணைக்களம் 18 வாகனங்களைப்பயன்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதோடு குறிப்பிட்ட வாகனங்களை திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வாக்களிப்பு நிலையங்கள் அனைத்திலும் சார்ஜன்ட் ஒருவர் தலைமையில் அல்லது பொலிஸ் கான்ஸ்டபிள் தலைமையில் குழுக்கள் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவிருப்பதாக றியன்ஸி பெரேரா மேலும் தெரிவித்தார். (ச-4)

# வீடு புகுந்து வாள்வெட்டு வயோதிபர் படுகாயம்

(பருத்தித்துறை)

வீட்டில் இருந்த வயோதிபர் வாளால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணிக்கு அல்வாயில் குமுத ணியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சீனித்தம்பி சிவசுப்பிரமணியம் (வயது-63) என்பவரே காயமடைந்தவராவார். இரண்டு கைகளிலும் காயமடைந்த அவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காணிப் பிரச்சினையே இவ் வாள்வெட்டிற்கு காரணமென தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-52)

# வாண்மைத்துவ செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 14 ஆம் திகதி புதன் கிழமை மாலை 6 மணி வரை புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு வாண்மைத்துவ செயலமர்வு நடைபெறவுள்ளது.

இதில் வகுப்பறை முகாமைத்துவம், பாடத்திட்டமிடலும் பாடக்குறிப்பு எழுதலும், மாணவர் தனியாள் வேறுபாடு அறிதல், ஆசிரியர் விழுமியங்கள், பிரயோகக் கல்வி உளவியல், கல்விச் சமூகவியல், கல்வி தத்துவார்த்த வரலாற்றியல், புதிய கல்வி செல் நெறிகள் ஆகிய தலைப்புக்களில் செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.

ஆர்வம் உள்ள புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் தங்கள் விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்து அதிபர் வலயக் கல்விப்பணிப்பாளர் ஊடாக எதிர் வரும் 25 திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு அனுப்பி வைக்குமாறு பீடாதிபதி கேட்டுள்ளார். பங்கு பற்றுவோருக்கு கல்வி அமைச்சினால் பெறுமதியான சான்றிதழ்கள் வழங்கப்படவுள் ளன. (ற)

# யாழ்.குடாக்கடற்பரப்பில்...

எதிர்வரும்தேர்தல் நாளன்று விசேட அதிரடிப்படையினர் பல பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு வன்முறைகளில் ஈடுபடுவோரைக் கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மூன்று பொலிஸாருக்கும்...

ஆதாரங்கள் தமது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக தமிழீழக் காவல்துறையின் பரிசோதகர் பொ.பவானி மன்றில் தெரிவித்தார்.

மூன்று பொலிஸார் தொடர்பான விசாரணை தொடர்ந்து இடம்பெற்றுவருவதால் விசாரணையை நிறைவுசெய்ய கால அவகாசம் தேவையாகவுள்ளதாகவும் இவர்கள் மீதான புலன்விசாரணை அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பித்து பொலிஸார் மீதான விசாரணை 59 தமிழீழ குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்கு அமைவாக இடம்பெற்று வருகின்றது எனவும் அவர் மன்றில் தெரிவித்தார்.

அத்துடன் தமிழீழப் பொலிஸார் அடுத்த தவணையில் 3 பொலிஸாருடைய குற்ற வரையறைகளை இனங்கண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார். (ச-4)

# அமைதி ஏற்பட வேண்டும் என இலங்கைச் சிறுவர்கள் விருப்பம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே பல ஆண்டு காலமாக நடைபெற்று வரும் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்று இலங்கையில் உள்ள பெரும்பான்மையான குழந்தைகள் விரும்புவதாக அமைதிக்காகப் பாடுபடும் ஒரு அமைப்பு நடாத்திய கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

சிலோன் அட்வான்ஸ் ஒப்பீஸ் என்ற அமைப்பு நடத்திய ஆய்வில் பங்கு கொண்ட பெரும்பான்மையான குழந்தைகள் அமைதி நடவடிக்கைள் நாட்டுக்கு நலன் தருவதாக உள்ளது என கருத்து வெளியிட்டுள்ளனர்.

மேலும் அமைதி நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்றும் அரசியல் மற்றும் இனரீதியான வேறுபாடுகள் களையப்பட வேண்டும் எனவும் குழந்தைகள் விரும்புவதாக இவ்வாய்வின் மூலம் தெரியவந்துள்ளது. ஆனால் அதே சமயம் இக் கருத்துக்கணிப்பில் பங்கு கொண்ட 36 வீதமான குழந்தைகள் புலிகளுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்துவதனை ஆதரித்துள்ளனர். (ச-4)

# தேர்தல் சுமுகமாக...

வாக்காளர் அட்டைகள் கிடைத்தாலோ கிடைக்காவிட்டாலோ எந்தவொரு நபரும் தமது பெயர் வாக்காளர் பாப்பில் உள்ள தென உறுதிப்படுத்தினால்வாக்களிப்பதற்குதகைமை உடையவர்கள் ஆவர்.

வாக்காளர் அட்டை கையில் இருந்தா லு ம் இல்லாவிட்டாலும் அவரின் அடையாளத்தினை உறுதிப்படுத்தி வாக்களிக்க முடியுமென தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இதேவேளை தேர்தல் தினத்தன்று வாக்களிக்கும் உரிமையற்ற ஒருவருக்கு வாக்களாளர் அட்டையில் கையெழுத்திடல், வாக்காளர் அட்டைகளை விற்றல் மற்றும் கொள்வனவு செய்தல், வாக்காளர் அட்டைகளைக் கைமாற்றுதல், ஏனை யோரின் வாக்காளர் அட்டைகளை வைத்திருத்தல், வாக்களிக்கும் முறை குறித்த பிரசுரங்களை வெளியிடுதல், வாக்களிப்பு நிலையங்களில் உள்ளவர்களுக்கு வாக்களிப்பு முறை குறித்து பிரசாரம் செய்தல், வேறுபிரதேச வாக்காளர்களின் வாக்குகளைப் பயன்படுத்தல் போன்றன வாக்களிப்பு நிலையங்களில் செய்யக் கூடாத செயல்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை பொலிஸாரிடம் ஒப்படைக்க நேரிடும் என்றார்.

சட்டத்தின்படி ஒருவருக்கு ஒரு வாக்குமட்டுமே உள்ளது. இதனால் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குகளை அளித்தல் சட்டத் திற்கு முரணானது. வாக்களிப்பு நிலையங்களில் அங்கீகாரம் பெற்றவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு வேட்பாளருக்காக இருபிரதி நிதிகள் சமூகமளிக்கமுடியும்.

வாக்களிப்பு நிலையங்களுக்குள் கையடக்கத் தொலை பேசி, ஆயுதங்கள் என்பன கொண்டுசெல்லப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

தபால்மூல வாக்குகள் எண்ணப்படுவது வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும். ஏனைய வாக்குகள் எண்ணும் பணி இரவு 8 மணிக்கு ஆரம்பமாகுமென தேர்தல் ஆணையாளர் மேலும் தெரி வித்தார். (ச-4)

# தேர்தல் மோசடியில்...

நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடபகுதியில் விசேடமாக யாழ்ப்பாணத்தில் வாக்கு மோசடிகளுக்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றது. இராணுவத்தில் ஓய்வுபெற்றுச் சென்ற சில அதிகாரிகளின் தலைமையின் கீழே இந்த நடவடிக்கை இடம் பெறுவதாக அவர் கூறினார். இராணுவத்தில் இருந்து விலகிச் சென்ற சுமார் 300 இராணுவ வீரர்களை எதிர்வரும் இரு நாட்களுக்குள் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் பதற்ற நிலைமைகளை ஏற்படுத்தவும் யாழ்ப்பாண மக்களை வாக்களிப்பில் இருந்து தவிர்க்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் இருந்து வரும் மக்களின் வாக்களிப்பினை தடுத்து வாக்கு மேசடிகளில் ஈடுபடுவதற்கான மற்றமொரு திட்டமும் தீட்டப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (ச-4)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.